# கிண்ணையடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு



ஆக்கம்
செல்வரட்ணம் மங்கையற்கரசி
2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை



# கிண்ணையடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வரலாறு

வெளியீடு – 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேச செயலாளர் அவர்களின் ஆசிச்செய்தி

கோறளைபற்று பிரதேசத்தில் பண்பாட்டு பாரம் பரியத்தில் தனித்துவமான கிராமங்களில் கிண்ணையடியும் ஒன்றாகும் இக் கிராமம் நவீன உலகில் வாழ்ந்தாலும் கூட மூதாதை யர் விட்டுச்சென்ற பாரம் பரியங்களை வளர்ப்பதில் இக் கிராம மக்கள் பின் நிற்கவில்லை இதனாலேயே இக் கிராமத்தில் ஆலயங்களும் கலை கலாசாரமும் பேணப்பட்டு வருகிறது அதிலும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் இவ்வூரின் தனிதுவமாகும் ஆலயங்கள் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்தல் என்பது காலத்தின் தேவையாக உள்ளது.

அந்த வகையில் கிண்ணையடிக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மங்கையற்கரசி செல்வரட்ணம் என்பவர் கிண்ணையடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் தொன்மையையும் சிறப்புகளையும் கொண்ட ஒரு நூலினை வடிவமைப்பது பாராட்டுக்குரிய விடயம் ஆகும்.

எனவே இவரைப் பாராட்டுவதோடு இதற்கு ஆசிச் செய்தி வழங்குவதை இட்டு நான் பெரும்மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி

**திரு.வன்னியசிங்கம்**
**வாசுதேவன்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பூசகரின் வாழ்த்துரை

விநாயகர் துணை

ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் அனைவருக்கும் திருவருள் புரிவாராக !

மட்டக்களப்பிற்க்கு வடக்கே அமையப் பெற்ற வாழைச்சேனை யருகேயான கிண்ணையடியில் அமர்ந்திருந்து அருள் புரிந்து வருகின்ற ஸ்ரீ மாணிக்க பிள்ளையாரின் வரலாறு ஊர் சார்ந்த வரலாற் றோடும் கூடிய ஒரு நூலின் வடிவம் வெளியிட முன்வந்த திருமதி மங்கையற்கரசி செல்வரட்ணம் அவர்களுக்கு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரின் திருவருள் கிடைக்க நாமும் பிராத்திக்கின்றோம்.

மனிதனில் இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிபடுத்துவது கல்வி குறிப்பாக கல்வியில் முதலாவது இனமாக இருந்து வந்த எம் இனம் இப்பொழுது குறுகிய காலத்தில் வீழ்ச் சியடைந்திருக்கின்றது என்பதை எம்மால் உணர முடிகிறது இதனை ஓரளவு நிவர்த்தி செய்யும் முகமாக இப்படியான ஆலயம் ஊர் சார்ந்த நூல் ஒன்றை வடிவமைத்தவர்களுக்கும் இவற்றிக்கு முன் நின்று உழைத்தவர் களுக்கும் ஆலய பிரதம குருக்கள் சார்பாக நல்லாசியையும் கூறி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் திருவருள் கடாட்சமும் எனது நல்லாசியும் உரித்தாகும்

"சர்வலோகா சமஸ்தா சுகினோ பவற்தோ"

நன்றி

**சிவஸ்ரீ நந்தகுமாரசர்மா**
**ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்**
**கிண்ணையடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலயத்தலைவரின் வாழ்த்துச் செய்தி :

**" மனிதத்துவம் விளையும் மகத்தான ஊர் கிண்ணையூர் "**

இயற்கை எழிலனைத்தையும் தன்வசம் கொண்டுள்ள கிண்ணையடி கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவத்தின் போது அதனை மேலும் அலங்கரிக்கும் முகமான சிறப்பு மலரான " கிண்ணையடி பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு" மலர் வெளியிடப்படுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன்.

நூல் வெளியீடு மற்றும் வாசிப்பு திறன் என்பன சுருங்கி வரும் தற்கால நவீன யுகத்தில் மக்களிடையே பக்தி உணர்வினையும் வாசிப்பு திறனையும் அதிகரிக்கும் நோக்கில் இம் மலரை வெளியிடும் எழுத்தாளரின் முயற்சி வாழ்த்தி வரவேற்கத்தக்கது.

அத்தோடு இம் மலர் கிண்ணையடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் கடந்த கால வரலாறு பாரம்பரியம் மற்றும் பண்பாடு என்பவற்றை உலகறியச் செய்யும் மலராக விலங்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்தித்து நல்வாழ்த்து தெரிவிக்கிறேன்.

**" வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "**

**R.இலங்கேஸ்வரன்**
ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார்
ஆலய நிர்வாகத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய நிர்வாகத்தினரின் வாழ்த்துரை

எமது கிராமத்தின் தொன்மை ஆலயத்தின் வரலாறு தொடர்பாக எமது கிண்ணையடி கிராமத்தைச் சேர்ந்த திருமதி செல்வரட்ணம் மங்கையற்கரசி என்பவர் ஒரு நூல் வடிவில் வெளிக் கொணர எடுத்த முயற்சிக்கு ஆலயத்தின் செயலாளராக வாழ்த்துகளை யும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடை கின்றேன்.

யுத்த வன்முறை காலங்களிலும் பல இயற்கை அனர்த்த நிகழ்வுகளில் போதும் ஆலயத்தின் மூல மூர்த் தியான மாணிக்கப் பிள்ளையார் அருள் எம் கிராம மக்களின் சௌபாக்கியமான வாழ் விற்க்கும் நீடித்த ஆயுளுக்கும் கூட பெரும் துணையாக இருந்து வருகின்றது என்பது எமது நீண்ட கால ஐதீகமாகும்.

எனவே எமது கிராமத்தின் தொன்மையையும் மாணிக்கப் பிள்ளையாரின் சிறப்பையும் இந்நூலில் சிறப்பாக வெளிக்கொண்டு வந்திருக்கும் இந் நூலாசிரியருக்கு எனது இதயம் கனித்த நன்றி களையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கின்றேன்.

நன்றி

க. புவினராஜ்
செயலாளர்
மாணிக்கப் பிள்ளையார் ஆலயம்
கிண்ணையடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய அதிபர் அவர்களின் ஆசியுரை

நூலாக்கம் என்பது எல்லோராலும் முடிகின்ற ஒன்றல்ல அதற்கு தனித்திறமை வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று ஆகும். இக்கிராமத்தில் உள்ள ஒருவர் நூலாக் கத்துறையில் தடம் பதித்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது இவ்வாறாக இன்னும் பலர் இக்கிராமத்தில் உருவாக வேண்டும் என்பதே எனது அவா!

அவ்வகையில் கிண்ணையடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளயார் ஆலயத்தின் வரலாற்றினையும் அருளம்சங்களையும் நூலுருவாக் கிய திருமதி.மங்கையற்கரசி செல்வரட்ணம் அவர்களின் முயற்சி வெற்றி பெற எனது ஆசியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி

த.இதயராசா
அதிபர்
மட்/கரு/கிண்ணையடி
சரஸ்வதி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## *திருமதி சௌந்தரவல்லி அருளேந்திரன் அவர்களின் ஆசியுரை :*

வயலும் வயல் சார்ந்த இடமும் அருகே மாதுறு ஓயாவின் கிளை ஆறும் ஓடிக் கொண்டிருக்கும் வாவிக் கரையின் அருகே கிண்ணை மரங்கள் சூழ்ந்திருந்ததனால் கிண்ணையடி என பெயர் பெற்ற ஊரை வளமான ஒரு இடமாக மிளிர அருளாட்சி செய்கின்ற ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரின் மகத்துவத்தையும் இவ்வாலய வளர்ச்சி பற்றியும் எழுதுவதற்கு இறைவனின் அருள் கிடைத்த திருமதி மங்கையற்கரசி செல்வரட்ணம் அவர்களின் கன்னி முயற்சிக்கு எனது பாராட்டுகளுடன் அவருக்கு கிண்ணையடியில் அமர்ந்து அருட்கண் பார்வையளிக்கும் விக்கினங்கள் தீர்கின்ற தொப்பை அப்பனின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

எமது ஊரிலே வாழ்ந்த மூதாதையர்கள் உட்பட எமது ஊரவர்கள் எனது பெற்றோர் நான் எனது குடும்பம் என எல்லோரும் இத்தும்பிகையானின் அருளும் ஆசியும் கிடைகின்ற நம்பிகையிலே வாழ்ந்து வருகின்றோம். இவரது அருளும் அற்புதங்களையும் எழுத்துருவில் கொண்டுவந்த எழுத்தாளருக்கு எனது பாராட்டுக்கள்.

**திருமதி.சௌந்தரவல்லி அருளேந்திரன்**
ஆசிரிய ஆலோசகர்
கற்குடா வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

நான் இந்தப் புத்தகத்தை எழுதியதன் நோக்கம் முற்று முழுதாக சமுதாய நலனைக் கருத்திற் கொண்டே எழுதப்பட்டவையாகும் முன்னர் யுத்தத்தினால் சூழப்பட்டிருந்த பிரதேசமாக எமது ஊர் இருந்திருந்தாலும் கூட கலை கலாச்சார சீரளிவுகள் எதுவும் இடம்பெறுவதில்லை. எமது தமிழின மக்கள் பண்பாட்டின் மையமாக வாழ்ந்து விழங்கியவர்கள் இப்பொழுது அந்நிய ஆதிக்கம் வந்தது போன்று எம்மில் உருவாகிய சில தவறானவர்களின் வருகையே சமூகத்தினரிடம் சில பண்பாட்டுச் சீரளிவுகளை ஏற்படுத்தி விட்டு சென்றிருந்தாலும் கூட அந்த தவறான நடவடிக்கைகளை சமூகத்தினர் விடுத்து கலை கலாசாரம் பண்பாடுகள் நிறைந்த ஒரு சமூகமாக கட்டி எழுப்பி பண்பாடுள்ள சமூகமாக எமது ஊர் வரவேண்டும் என்பதே நோக்கம் தமிழர் மத்தியில் ஏற்படுத்தபடும் பண்பாட்டுச் சீரளிவின் மூலமாக ஆலயங்கள் மதிக்கபடுவதும் குறைவடைந்துள்ளன ஆகவே தான் சமூகத்தினரின் நல்லொழுக்கம் பொறுமை நேர்மை சகோதரத்துவம் விட்டு கொடுக்கும் மனபான்மை இதனால் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கும் நற்பண்புகள் என அனைத்தையும் மக்கள் கடைபிடித்து வருவதன் மூலம் நல்லதொரு சமூகமாக எமது ஊர் உருவாகும்.

இதன் மூலம் ஆலயங்கள் பண்பாட்டு மையங்களாகவும் மதிக்கபட்டு கலை கலாச்சாரங்களும் சீரளியாமல் மதிக்க படும் என்று விநாயகர் எமக்களித்த நம்பிக்கையின் மூலமே இந்நூலை ஆக்கினேன் முற்று முழுதாக நல்லதொரு சமூகம் கட்டியெழுப்பப்படும் நற்பன்புகளைக் கடைபிடித்து அனைவரும் இறையருளைப் பெறுவோமாக!

நன்றி

**திருமதி மங்கையகரசி**
**செல்வரட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பாடல்

னானே!............ னானே!........... னானா.....
னன நானே னானே னானா

கிண்ணையடி ஊரினிலே
ஆற்றங்கரை அருகினிலே
அமர்ந்திருந்து அருள் புரியும் விநாயகரே ! .... 2
உம்மை அன்றாடம் வந்து நாமும்
வணங்குகின்றோம்
உம்மை அன்றாடம் வந்து நாமும்
வணங்குகின்றோம்

( கிண்ணையடி ஊரில் )

வேண்டும் வரம் வேண்டி
உம்மை நாடி வருவோம்
நாம் நினைத்த காரியம்
சித்தி பெற வைத்திடுவோம் – 2
எம்மை நோய் நொடிகள்
துன்பமின்றி காத்தருள்வாய் – 2

( கிண்ணையடி ஊரில் )

கிண்ணையடி ஊரிற்கே வினை தீர்ப்பாய் – என்றும்
அனைவருக்கும் நல்ல கல்வி அறிவைத் தந்திடுவாய் – 2
பாரினிலே நல்லவர்களாய் உயர்திடுவாய்
எம்மைப் பாரினிலே நல்லவர்களாய் உயர்திடுவாய் – 2

(கிண்ணையடி ஊரில் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் எழில் நிறைந்து எங்குமே பச்சைப் பசேலெனக் காட்சி தரும் பசுமையான எழிலை அள்ளித்தரும் ஊர்தான் கிண்ணையடிக் கிராமம். மட்டக்களப்பிற்கு வடக்கே முப்பது கிலோ மீற்றருக்கப்பால் அமைந்திருக்கும் வாழைச்சேனை என்னும் ஊரிற்குப் பக்கத்தில் அமைந்திருப்பதுதான் கிண்ணையடி என்னும் கிராமம் 1890ம் ஆண்டிலே இக் கிராமம் கிண்ணையடியாக உருவாக்கப்பட்டது முன்னர் காடாய் அமைந்திருந்த இடத்தினை காடுவெட்டி குடியேற்ற தினை மேற்கொண்ட பின்னர் கிண்ணையடி என்னும் கிராமம் ஆகியது இங்கு இயற்கையின் எழிலை சற்று அதிகமாகவே வழங்கியிருக்கின்றாள் போலும் இயற்கை அன்னை கிண்ணையடி ஊரிற்கு படுவான்கரைப் பக்கமாக இயற்கை யாகவே அமைந்த மாதுறு ஓயாவின் கிளையாறான வாவி யொன்றும் இருக்கின்றது.

அதிலே அக்கரைக்கும் இக்கரைக்கும் பயணம் செய்து வரும் மக்களை ஏற்றிக் கொண்டு வாவி அன்னையின் இதமான தாலாட்டிலே ஆடிப்பாடி மிதந்து சென்று வரும் வள்ளங்களும் வாவிக்கரைகளிலே நின்று வலைகளை வீசி மீன்களை பிடித்து செல்லும் மீனவர்களும் என வாவி கரையில் இருமருங்கிலும் மருத மரங்களும் அதனை சுற்றி நெற்குலைகளைத்தாங்கி வானை எட்டிபார்க்க நினைத்தும் குலைகளைத் தாங்க முடியாமல் சாய்ந்து கொள்ள நினைக் கும் பார்ப்போர் மனதிற்கு அமைதியான நிறைவைத்தரும் நிறைகுடமாய் அமைந்துள்ள நெற்கதிர்களை தாங்கி நிற்கும் நெல் வயல்கள் என அவ்விடங்களிலே நிறைந் திருக்கும் நெல்வயல்கள் பூத்துகுலுங்கி வித்துகளை அறுவடை செய்யும் வரை அவ்விடம் கண்கொள்ளா காட்சி யாகவே அமைந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடையின் பின்னர் ஆடுகளும் மாடுகளும் கூட தாரை தாரையாக அணிவகுத்து அவ்விடங்களில் மேயும் இடையிடை வெள்ளைக் கொக்குகளும் மீன் கொத்தி பறவைகளும் கூட அந்த வெளிகளில் நடந்து சென்று பின்னர் படபட வென சிறகடித்து மேலே பறந்து சென்று அவ்விடத்து சோலை மரங்களிலே அமர்ந்து கொள்ளும் வாவிக்கரையிலிருந்து வயல் வெளிகளை தாண்டி வரும் போது ஒரு சிறிய ஏற்றமாக கிண்ணையடி கிராமத்திற்குள் வரும் பாதை அமைந்திருந்தது அந்த ஏற்றத்தில்தான் கிண்ணமரங்கள் கிண்ணம் பழங்களைச் சுமந்த படி நின்றிருந்தனவாம் கிண்ணமரங்கள் இங்கு காணப்பட்ட தாலே தான் கிண்ணையடி என்னும் பெயர் இவ்வூருக்கு வந்ததாக சொல்லப்படுகின்றது.

இப்படியான இயற்கை எழில் நிறைந்த ஊரிலே அமையப் பெற்றிருப்பது தான் எமது கிண்ணையடிப் பிள்ளையார் ஆலயம். அதிலே அமர்ந்திருந்து அருளாட்சி புரிந்து வருபவர் தான் எம்பெருமானாகிய விநாயகப்பெருமான் எமது ஊராகிய கிண்ணையடிலே தமிழரின் பாரம்பரிய வழிபாட்டு மரபிற்கமைவாகவே எமது பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. இற்றைக்கு (108) நூற்று எட்டு வருடங்களிற்கு முன்னர் 1904ம் ஆண்டளவில் கிண்ணையடி மத்தியிலே கிண்ண மரங்கள் நிறைந்து நின்ற இடங்களிலே ஒரு பெரிய அரச மரமும் ஒன்று இருந்திருக்கின்றது. அந்த அரச மரத்தின் அடியினிலே தான் முதல் முதலில் எமது ஊரில் பிள்ளை யார் அமர்த்தப்பட்டிருக்கின்றார்.

கிண்ணையடியினிலே பரம்பரை பரம்பரையாக வேரூன்றி வாழந்து வந்த முதலாம் தலைமுறையினைச் சேர்ந்தவரான ஒருவர் தான் வாவி கடந்து வயல் வேலைகளுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்களுக்குச் சென்று வரும் போதே, அக்கரையில் அமைந்திருந்த வயல் ஒன்றிற்குள் கறுப்பு வடிவிலான கல் வடிவில் அமைந்திருந்த பிள்ளையாரைக் கண்ட போது அதனை ஊரிற்குள் எடுத்து வந்து கிண்ணையடி மத்தியிலே அரச மரத்தடியினிலே அமரச் செய்து எல்லோரும் வழிபட்டு வந்திருக்கின்றனர் ஆரம்பத்தில் ஓலையினாலே வேயப்பட்ட கொட்டகை அமைத்தே எம்பெருமானை இவ்வூர் மக்கள் வழிபட்டு வந்தனர் பின்னர் 1915ம் ஆண்டளவில் வாழ்ந்தவர்களான ஐந்தாம் தலைமுறையினரானவர்களின் காலங்களில் கோயிலுக்குரிய நிர்வாகத்தினர்களை ஊர் மக்கள் தெரிவு செய்து நிர்வாகங்கள் அமைக்கப்பட்ட காலங்களில் எமது ஊரின் முன்னோர்களினால் கோயிலுக் குரிய காணியாகவும் இந்த காணி வழங்கப்பட்டு ஊர் மக்களின் அனுசரணையின் கீழ் நிதி திரட்டப்பட்டு எம் பெருமானின் ஆலயம் விநாயகர் ஆலயமாக உருவாக்கப் பட்டது. அந்த காலப்பகுதியில் தான் கல்வடிவிலிருந்து பிள்ளையாருக்கு தொந்தி வளர்ந்ததாகவும் எம் ஊர் மக்களை அதிசயிக்க வைத்த உண்மை நடந்ததாகவும் சொல்லப்படுகிறது "விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான் விநாயகனே வேட்கை தனிவிப்பான் விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய் தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து" விநாயக பெருமானை முழு மனதோடு வழிபடுவதன் மூலம் அனைத்து வினைகளையும் வேரறுக்கவல்லவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே உலகத்திலே படைக்கப்பட்ட அனைத்திலுமே கலந்து நிறைந்திருப்பவரான சிவபெரு மானுக்கும் பார்வதிக்குமான மூத்தபுதல்வரானவர் விநாயகப் பெருமான்.

சிவன் எனப்படுபவர் அகர உயிர் போல் உலகத்தில் உள்ள எல்லா வற்றிலுமே கலந்திருப்பவர் ஆதியும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் இல்லாதவர் (ஒரு தடவை படைத்தல் தொழிலை மேற் கொள்ளும் பிரம்மாவிற்கும் விஷ்ணுவிக்கும் இடையில் தமக்குள் யார் பெரியவர்கள் என்ற அகந்தை வெளிப்பட்ட போது தாமே அடியும் முடியுமின்றிய ஒளிப்பிளம்பாகி நின்று கொண்டு சிவனின் அடி முடி தேடிய பிரம்மாவும் விஷ்ணுவும் அடியையும் முடியையும் காணாமலே திரும்பிய போது அவர்கள் முன் தோன்றிய சிவபெருமான் சொல்கின்றார் இறைவனுக்கு முன் யாவரும் சமமானவர்களே என்பதை விளங்கிய அரும் பெரும் ஜோதியானவர் சிவபெருமான் இறைவனுக்கு முன் யாவரும் சமமானவர்கள் என்பதை விளங்கிய போது சிவனின் முடியைத் தேடிச் சென்ற பிரம்மாவானவர் சிவபெருமானிடத்தில் நான் தங்களுடைய முடியைக் கண்டேனெனப் பொய் சொல்கின்றார் தாளம் பூவையும் பிரம்மா கொண்டு வந்து சிவனிடம் பொய் சொல்ல வைக்கின்றார்.

சர்வமும் அறிந்த முக்காலத்து சர்வேஸ்வரனிடம் பொய் சொல்ல முடியுமா " ஏன் பிரம்மனே பொய் சொல்கிறீர்கள் " ஏளனமான விடயம் இப்படியெல்லாம் தேவர்கள் பொய் சொல்லக் கூடாது என்பதை விளக்கி உணர வைத்து பிரம்மாவை திருந்த வைக்கின்றார் சிவன் தாழம் பூ பிரம்மாவுடன் சேர்ந்து பொய் சொன்னதினாலே தான் பூஜைக்கு தாழம் பூவை வைக்ககூடாதென்று சிவபெருமா னால் தவிர்க்கபட்டது. சிவபெருமான் உருவம் அருவம் அருவுருவம் ஆகிய திருமேனிகளில் நின்று ஆன்மாக் களுக்கு அருள் புரிவார் கடவுள் பதி இறைவன் பரம்பொருள் நிர்மலன் ஈஸ்வரன் சிவன் மெய்ப்பொருள் என்பதெல்லாம் சிவம் என்ற ஒரு பொருளயே குறிக்கின்றது சிவம் என்பதே அவைகனைத்தின் உயர்ந்த பொருளாகும் சைவ சமயத்தை உள் நின்று உணர்த்தும் பரம்பொருளே சிவம் என்ற சிறப்பும் பெற்றுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாதேவியாரும் பார்வதி கௌரி சக்தி அம்பிகை துர்க்கை எனப் பல பெயர்களாலும் வணங்கப்படுபவர். சிவமின்றி சக்தியில்லை சக்தியின்றி சிவமில்லையென சிவன் ஆலயங்களிலும் வேறு எந்த ஆலயமாக இருந்தாலும் அர்த்த மண்டப வடக்குப் புற சுவரில் காணப்படும் கோஸ்ட்டத்தில் நின்ற கோலத்தில்க் காணப்படுவார் அம்பிகைக்கான தனி ஆலயங்களும் உண்டு அங்கே கர்ப்பக் கிரகத்தில் அம்பிகை வீற்றிருப்பார் நான்கு கரங் களிலும் மேற்கரங்களில் சங்கு சக்கரமும் கீழ்க்கரங்களில் சூலம் கபாலம் என்பனவும் காணப்படும். சிவனுடன் இரண்ட றக் கலந்து அர்த்த நாதீஸ்வரர் அவதாரமும் பெற்றவர் பார்வதியானவள் நாம் சிவனை வழிபடுவது போன்று துர்கையையும் வழிபட வேண்டும் அபிராமி அந்தாதி துர்க் காஸ்டகம் என்பனவற்றைப் பாடி வழிபடுதல் வேண்டும். வெள்ளி செவ்வாய் போன்ற தினங்களில் நெய் விளக்கேற்றி குங்குமத்தினால் அர்ச்சனை செய்து வழிபடுதலும் சிறப்பான தாக அமையும் சிவபெருமான் பார்வதியினரின் மூத்த புதல் வரான பிள்ளையாருக்கும் கணபதி, ஐங்கரன், விநாயகர், கஜமுகன் எனப் பல பெயர்களும் உண்டு.

சிவ பெருமான் பார்வதியினரின் இளைய புதல்வாரன கந்த பெருமானுக்கும் சுப்பிரமணியன், கார்த்திகேயன், சரவணபவன், ஆறுமுகன், முருகன் எனப் பல பெயர்களும் உண்டு. ஆதிகாலத்தில் மனிதர்கள் மரம் செடி கொடி போன்ற இயற்கையான அவதாரம் அனைத்திலுமே கடவுளைக் கண்டு வழிபட்டனர் என்றும் இறைவனும் இயற்கையும் என்னும் போது இறைவனினாலே படைக்கப்பட்ட இயற்கை அனைத்திலுமே தான் கடவுள் இருக்கின்றார் எனவே இயற்கையானவற்றை வழிபட்டு வந்த மனிதன் நாகரிக வளர்ச்சிக்காணத் தொடங்கிய போது தான் இயற்கைக்கு அப்பாலும் யாவற்றையும் கட்டுப்படுத்தி இந்த உலகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையே இயக்கிக்கொண்டிருக்கும் பரம் பொருள் எனப்படும் ஒரு இறைவன் இருக்கிறார் என்பதையும் விளங்கி கொண்டனர்.

அதன் பின்னர் எல்லாத் தெய்வங்களும் ஒரே இறைவனின் அம்சங்கள் என்பதையும் அறிந்து உணர்ந்த பின்னர்தான் இறைவனின் திருவுருவங்களை கருங்கற்களினாலும், செப்பு, வெள்ளி ஐம்பொன், இரத்தினம் போன்றவற்றாலும் செதுக்கி சிலைகளாகவும் சிற்பங்களாகவும் வடிவமைத்து வழிபடத் தொடங்கினர் பரம்பொருளை மெய்யன்போடு வழிபடுவதன் மூலம் நாம் வேண்டும் அனைத்தையும் இறை வனிடமிருந்து பெறுவதாக அமையும் கடவுளை மெய்யன் போடு வழிபட்டு வந்த நாயன்மார்களான திருஞானசம்மந்தர் பரம்பொருளை தந்தை என்ற நிலையில் வைத்து வழிபட்டு வந்தார்.

குளக்கரையில் தந்தை நீராடும் போது அழுத பிள்ளை யானவரும் திருஞான சம்மந்தரே அதே நேரம் பார்வதி யானவளிடம் ஞானப்பால் உண்டவரும் திருஞான சம்மந்தரே பரம் பொருளை திருநாவுக்கரசு நாயனார் "ஆண்டான்" என்ற நிலையில் வைத்து வழிபட்டு வந்தாரென்றும் மாணிக்கவாசகர் பரம் பொருளை குருவாக நினைத்து வழிபட்டு வந்தார் என்றும் சுந்தரமூர்த்தி நாயனார் தோழனா கவும் நினைத்து வழிபட்டார் என்றும் எந்த உறவு நிலை கொண்டும் இறைவனை மெய்யன்போடு வழிபடலாம் என்ற தனித்துவம் சைவ சமயத்துக்குண்டு என்று சொல்லப்படு கிறது இந்து மதத்தினை உண்மையின்படி பின்பற்றி வாழ்ந் தவர்கள் சமய வழக்காறுகளின் படி நேர்மையின் நிமித்தம் வாழ்ந்தவர்களாகவும் வாய்மை என்றசொல் தவறாமலும் உண்மை என்ற நிலை தவறாமலும் வாழ்ந்தவர்களாகப் போற்றப்படுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை என சொல்லப்படுவது அடுத்தவர்களிற்க்கு தீமை ஏற்படுத்தாத சொற்களை கதைப்பதும் கூட வாய்மை யாகும் இந்து மதம் கூறும் வாய்மைக்கு நேர்மையாக விளங்கியவர்கள் அரிசந்திரன் மகாத்மாகாந்தி போன்றவர் கள் வாழ்ந்தார்கள் என்றும் மனித வாழ்க்கை விழுமியங் களால் போற்றபடுகின்றனர் உண்மையும் அகிம்சையும் கடமை என்பனவும் உயர்ந்த அறவாழ்க்கைக்கு அவசிய மாகிறது.

சைவ சமயமானது இலங்கையிலே வரலாற்றுக் காலத் திற்கு முன்பே வேரூன்றி வளர்ச்சி பெற்றிருந்ததாகவே சொல்லப்படுகின்றது இலங்கை மண்ணை ஆக்கிரமித்து வந்த அந்தியபடையினரான ஒல்லாந்தர்கள், போர்த்து கேயர்களின் ஆட்சி இலங்கையில் நடைபெற்று வந்த காலங்களில் கூட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல சைவ ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டன. இந்து மதத் தினை மெய்யன்போடு வழிபட்டு வந்த பெரியவர்கள் பலரும் துன்புறுத்தபட்டார்கள் இதனாலே அவர்கள் நாட்டை விட்டு ஒடி வேறு நாடுகளிலேயும் வாழ்ந்து வந்தார்கள் ஒல்லாந் தரும் போத்துகேயருமே தமிழர் மத்தியில் ஒரு ஆக்கிர மிப்புப் படையாக மாறி மிகக்கடுமையான அநீதிகளை தமிழருக்கு ஏற்படுத்தினார்கள்.

இந்து மதத்தினை இலங்கையில் இல்லாது செய்வதற் காகவே இந்து ஆலயங்களை அழித்து தமிழர்களை கிறிஸ்தவ மதத்தை பின்பற்றச் செய்தார்கள் எமது வரலாற்று முக்கியதுவம் பெற்ற சைவ ஆலயங்கள் எல்லாவற்றிலுமே அந்தியர்களின் அரச பாரம் பரிய ஆக்கிரமிப்பு எச்சங்கள் காணப்பட்டதையே அறிகின்றோம் ஒல்லாந்தரும் போத்து கேயருமே மக்களின் மத்தியில் நீதி நியாயங்களை இல்லாது செய்தார்கள் இந்து மதத்தினைப் பின்பற்றிய சைவ சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார்கள் பலர் யாழ்ப்பாண மாவட்டங்களில் அந்திய படைகளுக்குப் பயந்து பயந்து தான் மறைமுகமாக இந்து மதத்தினை வழிபட்டு வந்திருக்கின்றனர் அதன் பின் 1796ம் ஆண்டு இலங்கையை வந்தடைந்து ஆட்சியை மேற் கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சிக் காலங்களில் தான் ஓரளவாவது நீதி நியாயங்களையும் இலங்கைக்கு கொண்டு வந்திருந் தனர். அதன் பின்னர் தான் ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் தான் இலங்கையிலும் நீதி மன்றங்கள் அமைக்கபட்டதாக வும் குற்றம் செய்பவருக்கு தண்டனை என்றதொரு அறிமுகம் இலங்கையிலே கொண்டு வரப்பட்டு பல வகையான சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்த பட்டதாகவும் அறிகின்றோம் 1948ம் ஆண்டு தான் இலங்கையில்லிருந்து ஆங்கிலேயர் வெளியேறிய தன் பின்னர் இலங்கை சுதந்திரம் அடைந்தது.

இலங்கை நீதி மன்றங்களிலே இன்றுவரையும் ஆங்கிலேயரினால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சட்ட முறையே தான் நடைமுறையிலிருந்தும் வருகின்றது. இலங்கை என்பது பல வகையான மொழி கொண்டவர்களும் பல இனங்களை சேர்ந்தவர்களும் வாழ்ந்து வரும் நாடு ஆகையினாலே தான் ஒரு சமத்துவமான ஆட்சி நிர்ணயத் தாலானது இது வரையும் இடம்பெறவில்லை. காரணம் இனங்கள் வேறு வேறு மொழிகள் வேறு வேறு என்பதாலும் துரோகங்களும் அநீதிகளுமே மாறி மாறி நடைபெறும் இடமாகவும் இலங்கை அமைந்திருந்தது இப் பொழுது தான் எமக்கு கிடைத்துள்ளது நல்லாட்சி அரசு என்று சொல்லப் படுகின்றது. எமக்கு நல்லாட்சியானது இதுவரையும் கிடைக்கவில்லை எமக்கு கிடைத்துள்ள நல்லாட்சியானது பெயரளவில் மட்டும் இல்லாது செயலளவிலும் எமது ஊரிற்க்கு கிடைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் எமது பிரதேச மக்களின் தேவையாக இருக்கின்றது இலங்கை என்பது ஒரு சிறிய நாடாக இருந்தாலும் பல்வேறுபட்ட அந்நிய நாட்டவரின் வல்லாதிக்கத்தின் கீழ் இருந்தே விடுதலை அடைந்தது அதன் பின்னரே உடைக்கப்பட்ட அநேகமான ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு மீள் புதுப்பித்தலுடன் இந்து மக்கள் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர் ஆகவே சைவ சமயமானது இலங்கையிலே வரலாற்று காலத்திற்கு முன்பே தமிழ் மக்களிடத்தில் வேரூன்றி வளர்ச்சி பெற்றிருந்ததாகவே சொல்லப்படுகிறது. எமது இந்து மதம் மிகவும் தொன்மை வாய்ந்தது அதுவும் இலங்கை நாட்டிலே மட்டும் தான் இந்து மக்கள் அதிகமாக வாழும் இடமாகவும் கலை கலாச்சார சமய விழுமியங்களைக் கடைப் பிடித்து பண்பாட்டுடன் வாழ்ந்த இடமாகவும் இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே பூர்வீகப்பிள்ளையார் ஆலயங்களுள் ஒன்றாக எமது கிண்ணையடிப் பிள்ளையார் ஆலயமும் விளங்கி வருகின்றது மட்டக்களப்பு மாவட்டத்திலே பிள்ளையார் ஆலயங்களே அதிகமாக இருக்கிறது அதிலும் மாமாங்கப் பிள்ளையார் களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலயங்கள் சிறப்புப் பெற்றவைகளாகவும் தொன்மை வாய்ந்ததாகவும் விளங்குகின்றன. பிள்ளையார் வழிபாடு என்பது இந்து மக்களுடைய வாழ்க்கையோடு தொன்று தொட்டு வருவதாகும் இந்து மக்களின் வழிபாட்டுக்குரிய முதல்தெய்வம் விநாயகபெருமான் அகார உகார மகார வடிவமாகிய ஓம் காரத்தின் விஸ்வரூபமாகியவராய் வீற்றிருப்பவர் எமது விநாயகப்பெருமான்.

நாம் எந்தவொரு காரியத்தை தொடங்க முன்னரும் விநாயக பெருமானை வழிபாடு செய்ய வேண்டும் எந்த நிகழ்வுகளிலும் முதல் வழிபாட்டிற்குரியவராக விநாயக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் போற்றப்படுபவர். என்பதாலும் விநாயகப்பெரு மானை வணங்கி விட்டு தொடங்கும் காரியம் யாவுமே வெற்றி பெற்று சிறப்பானதாக அமையும் என்பதனாலேயும் முதலில் விநாயகப் பெருமானை வழிபட்டு விட்டே தொடங்குவதும் இந்து மக்கள் மரபுகளில் ஒன்றாகி விட்டது விநாயகர் என்ற சொல்லின் பொருள் "தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன் என்பதாகும்" எனவும் சொல்லப்படு கின்றது "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற தமிழரின் பண்பாட்டு மரபிற்கு அமைவாக அமைந்துள்ளது. தான் கிண்ணையடிப் பிள்ளையார் ஆலயமும் ஒவ்வொரு நாள் காலையிலும் விநாயகப் பெருமானின் பக்த அடியார் கள் பிள்ளையார் ஆலயம் வந்து எம்பெருமானை வழிபட்ட தன் பின்னரே தாங்கள் கடமைகளைச் செய்ய தொடங்கு வார்கள் அந்த அளவிற்கு பக்த அடியார்களின் நம்பிக்கைக் குரியவராக எமது விநாயகப் பெருமான் கிண்ணையடியிலே அமர்ந்திருந்து அடியவர்களின் குறை தீர்ப்பவராக இருந்து வருகின்றார் எமது உடம்பிலே ஆறு ஆதாரங்கள் இருக் கின்றன அதனை அடிப்படையாகவைத்தே ஆலயங்கள் அமைக்கபடுகின்றன 1915ம் ஆண்டு எமது விநாயக பெருமானுக்குரிய ஆலயம் எமது ஊரிலே அமைக்கப்பட்ட தன் பின்னர் கிண்ணையடியைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர்களான கணபதி மாரிமுத்து என்பவரின் கண்களி லிருந்து நீர் வடியுமாம் எந்த மருந்துக்கும் சுகமாகவே இல்லையாம் என் பெருமானே ஏன் எனக்கு கண்களில் இருந்து நீர் வடிகிறது நீங்கள் தான் எனக்கு துணையாக வேண்டும் என்று மாரிமுத்து என்பவர் ஒவ்வெரு நாள் காலையிலும் விநாயகப் பெருமான் ஆலயத்திற்க்கு வந்து நாளாந்தம் ( 9 ) ஒன்பது குடம் தண்ணீர் பிள்ளையாருக்கு ஊற்றி வேண்டுதல் செய்தாராம் உடனே மாரிமுத்து என்ப வரின் கண்களில் வடிந்த நீர் இல்லாமல்ப் பொயிற்றுதாம் அதனாலே தான் அன்றிலிருந்து தான் எம் பெருமானுக்கு "மாணிக்கப் பிள்ளையார்" என்ற பெயர் உருவாகியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கப்பிள்ளையார் என்ற பெயரைப் பெற்ற எம் பெருமான் கண்ணைக் காக்கும் இமை போல இருந்து எம் ஊர் மக்கள் அனைவர் மீதும் அன்பு கொண்டு அக்கறையும் காட்டியிருக்கின்றார் என்பதும் குறிப்பிடக் கூடிய விடயம் எமது கிண்ணையடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயமானது எமது கிண்ணையடி ஊர் மக்களால் நிதி திரட்டபட்டு பின்னர் கருங்கற்களினாலும் மாபிள்களினாலும் ஆலயம் புனருத்தானம் செய்யப்பட்டு அமைக்கபட்டது. நமது பாதங்கள் கோபுர மாகவும் முழங்கால் ஆஸ்தான மண்டபமாகவும் தொடை நிறுத்த மண்டபமாகவும் தொப்புள் பலீபீடமாகவும் கழுத்து அர்த்த மண்டபமாகவும் தலை கர்ப்ப கிரகமாவும் அமைய பெற்றிருக்கும்.

அந்த ஆலய அமைற்பிக்கமைவாகவே எமது கிண்ணை யடி மாணிக்க பிள்ளையார் ஆலயமும் அமையப்பெற்றுள் ளது ஆலயத்தின் அடிப்பகுதியானது முதலாவதாக கரு வறை எனப்படும். கருவறை என்பது தூபி விமானம் கலசம் என மூன்று பெயர்களால் அழைக்கப்படும் கருவறையினுள் எமது மாணிக்கப்பிள்ளையார் வீற்றிருக்கின்றார் தன்னைத் தரிசிக்க வரும் அனைத்து பக்தர்களையும் அன்பு பொழிந்து வர வேற்பதைப் போல் கம்பீரமான தோற்றத்துடன் எம் பெருமான் வீற்றிருக்கின்றார் கருவறையினுள் ஆரோக னித்து இருக்கும் விநாயகப் பெருமானுக்கடியில் ஐம்பொன் எனப்படும் தகடு பதிக்கபட்டிருக்கும்

காலை இருளை அகற்றி சூரியன் தனது ஒளிர்க்கதிர் களை அகல விரித்து தனது ஒளி எனப்படும் பிரகாசத்தினை பூமிக்கு வழங்க தொடங்கி சூரியன் மேலே மேலே செல்லச் செல்ல உச்சி வேளை வெயில் என மதிய நேரம் ஆகியதும் சூரியனின் ஒளிகதிர்கள் பின் கோபுர கலசத்தினூடாக கருவறையில் வீற்றிருக்கும் எம் பெருமானின் உச்சிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே வரும் அப்போது சூரியனின் ஒளிகதிர்கள் பின் கோபுர கலசத்தினூடாக சென்றதும் கருவறையில் வீற்றிருக்கும் எம் பெருமானின் அருளாட்சியும் சேர்ந்து சூரிய ஒளிர்க்கதிர் களினூடாக மதிய பூஜை நடைபெறும் வேளையில் அது நிர்மாகதிர் வடிவில் பலிபீடத்தை நோக்கி வந்து கொண்டி ருக்கும் பூசகர் அந்த நேரம் பூஜை செய்து கொண்டிருக்கும் மதிய நேரமாக இருக்கும் அப்பொழுது தரிசன மண்டபத் தினுள் நின்று வழிபடும் பக்த அடியார்களில் பெண்கள் இடது பக்கமாகவும் ஆண்கள் வலதுபக்கமாகவும் நின்று வழிபட வேண்டும் விநாயகப்பெருமானின் நிர்மாக் கதிர் எனப்படும் நேரடியான ஒளிகதிர்கள் பலீபிடத்தை நோக்கி வெளிவரும் போது ஆலயத்தின் வலது பக்கம் ஆண்மா கதிராகவும் இடது பக்கம் பெண்மாக் கதிராகவும் ஒளிபரவி வெளிப்படும் அந்த வழிபாட்டு நேரங்களில் வழிபடும் அடியார்கள் இடம் வலம் மாறி நிற்கும் போது அதாவது உதாரணமாக வலப்பக்கம் நின்று வழிபட வேண்டிய ஆண் அடியார்கள் தரிசன மண்டபத்தினுள் இடது பக்கமாக நின்று வழிபடுவாராக இருந்தால் அவருடைய வலு பெண்களைப் போன்றதாகக் குறைவடையுமாம் அதே போல அந்த நேரம் பெண் அடியார்கள் வலது பக்கமாக நின்று வழிபடுபவராக இருந்தால் அவர்களுக்கு ஆண்களை போன்றதாக வலு கூடுமாம் என்று சொல்லப்படுகின்றது இதற்காகவே ஆலயங் களில் பூஜை நேரங்களில் ஆண்கள் வலபக்கமாவும் பெண்கள் இடப்பக்கமாகவும் நின்று வழிபடுதல் வேண்டும்.

எல்லா ஆலயங்களிலும் இந்த ஒழுங்கு முறையே பின்பற்றப்பட்டும் வருகின்றது கருவறையினுள் பூஜை நடை பெறும் போது அதற்குள் வீற்றிருக்கும் விநாயகப்பெருமான் பக்தர்களின் வேண்டுதல்களை சித்தி கணபதியாக இருந்து சித்தி பெற வைப்பவராக இருப்பார் என்று சொல்லப்படு கிறது கருவறைக்கு அடுத்ததாக இரண்டாவதாக கர்ப்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகம் அமைந்துள்ளது இதற்குள் விக்கிரகங்களாக பிள்ளையார் அமர்ந்திருப்பார். அடுத்ததாக மூன்றாவதாக அர்த்த மண்டபம் அமைந்திருக்கும் இதற்குள் விக்கிரகங் கள் எதுவும் இல்லாத இடமாக இருக்கும் அடுத்ததாக நான்காவதாக அமைந்திருப்பது மகாமண்டபம் இதிலே உற்சவ மூர்த்திகள் குடும்ப உறவினர்களாக வீற்றிருப்பார்கள்.

இடது பக்க மூலையிலே சிவலிங்கமாக சிவபெருமானும் வலது பக்க மூலையிலே அம்பாளும் பிரசன்னமாகி இருக்கின்றனர் அடுத்ததாக ஐந்தாவதாக அமைந்திருப்பது தரிசன மண்டபம் அதிலேதான் பூஜைநேரங்களில் ஆண்கள் வலபக்கமாகவும் பெண்கள் இடதுபக்கமாகவும் நின்று வழிபடும் வேறுபாடுகள் இருக்கும் இடமாக அமையும். அடுத்ததாக ஆறாவதாக அமைந்திருப்பது கோபுரம்:- இவ் இடத்திலே நின்று கால்களை ஒடுக்கி கைகளை கூப்பி வணங்குவதால் புன்னிய தரிசனம் கிடைக்கும் இடமாக இருக்கின்றது.

கோயிலின் மணிக் கோபுரமானது ஆலயத்தின் இடது பக்கத்திலே இருக்கும் மனித உடலின் அமைப்பினை ஒத்த தாகவே அதுவும் இருக்கும் மணிக் கோபுரத்திற்கு நேராக முன்பாக ஆலயத்தினுள் முருகன் ஆலயம் இருக்கும் கோபுரத்திற்கு நேராக வசந்த மண்டபமும் முழங்கையாக அலங்கார மண்டபமும் இருக்கின்றது. உற்சவ நேரங்களில் அலங்கார மண்டபத்தினுள் சிறப்பான முறையில் பூஜைகள் இடம் பெறும் மணிக் கோபுரத்திற்குப் பக்கத்தில் வைரவர் அமைக்கபட்டிருக்கின்றார். அதற்கு முன்னிலையாக நவக்கி ரகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன வைரவரின் இடபக்கம் கழுத்துப்பகுதியை நோக்கியவராக சண்டேஸ்வரர் அமர்ந் திருப்பார் நாம் சில ஆலயங்களுக்குச் சென்றதும் பார்த்தி ருக்கின்றோம் ஆலயத்தினுள் சிறியதாக கொத்து மணியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தனி மணியோ முன்னால் இருக்கும் ஆலயத்திற்கு வழிபடுவதற்காக வருகை தரும் பக்த அடியார்கள் அந்த மணியினை அடித்து விட்டே பின்னர் தான் இறைவனை வழிபடுவார்கள் அதனை நாம் பார்திருக்கின்றோம் ஆனால் இப்படி மணி அடித்தலானது ஏன் தெரியுமா? ஆலயங்களினுள் பூஜை நேரமின்றிய நேரங்களில் இறைவன் அமைதியான ஒரு ஆழ்ந்த நிலையில் இருப்பார்.

அமைதியான அந்த நேரங்களில் அவரைச்சுற்றி கெட்ட பூதகனங்களும் இருக்குமாம் நாம் ஆலயத்திற்குச் செல்லும் போது நீராடிய பின் தோய்ந்துலர்ந்த ஆடை அணிந்து பூக்கள், கற்பூரம், ஊதுபத்தி, தேங்காய் என எடுத்து கொண்டு சென்று ஆலயத்தின் வெளிக்கினற்றிலே கால்களைக்கழுவி விட்டு கையில் சிறிதளவு நீரை எடுத்து தலையிலும் தெளித்து விட்டு தூய உள்ளத்தினோடு ஆலயத்தின் னுள்ளே சென்றதும் என் அப்பனே என் இறைவா எனக் கைகளை கூப்பி வணங்கும் போது அந்தமணியினை அடிக்கின்றோம் அரக்கர்கள் அரண்டோடிட அமரர்கள் திரண்டு சூழ மணிநாதம் அடிக்கின்றேனே எழுந்தருள்வாய் எந்தை இறைவா என இவைகளை இறைவனிடம் மணி அடித்தலில் மூலம் எடுத்தியம்பும் போது கெட்ட பூதகணங் களை இறைவனிடத்தில் இருந்து நாம் அகற்றி விடுவதாக இந்த மணி அடித்து விட்டு வழிபடுவதானது அமைகின்றது.

மணி அடித்து விட்டு இறைவனை விழிப்படைய வைத்த தன் பின்னர் வழிபடுதலே தான் இறைவனிடத்தில் சென்ற டையும் கெட்ட பூதகணங்கள் இறைவனிடத்தில் சூழ்ந்திருக் கும் போது நாம் இறைவனை நோக்கி எந்த அளவு தான் வழிபட்டாலும் இறைவனிடம் சேராது என்பதும் கெட்ட பூதகணங்களினாலே தான் அது அப்படி நிகழ்கின்றது என்பதனாலேயே நம் வேண்டுதல்கள் இறைவனிடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர வேண்டும் என்பதற்காவே மணி அடித்து விட்டு இறைவனை வழிபடலாம் என்பதும் மரபு நாம் இறைவனை வழிபடும் போது கோயிலில் முதலில் கொடிமரம் பலீபிடம் நந்தி ஆகியற்றிற்கு முன் போய் நின்று வணங்க வேண்டும் பண்புடன் வாழும் ஒருவருடைய வாழ்வியற் பண்புகள் விழுமியங்கள் எனப்படுகின்றன.

மனிதர்களிடம் காணப்படுகின்ற உயர்ந்த மனித பன்புகளே என்றும் மனிதனை மனிதனாக வாழ வைக்கின்றன மனம் துய்மையாக இருத்தல் என்பது உளதூய்மையாகும் புறத் தூய்மை என்பது நீரால் அமைவது அகத்தூய்மை எனபது அன்பால் அமைவது சிந்தணை சொல் செயல் என்பன தூய்மையானதாக அமைய வேண்டும். அதற்கு ஒவ்வொரு உள்ளத்திலும் அன்பு இருத்தல் வேண்டும் இதனாலயே பொய், களவு குரு நிந்தனை போன்ற பஞ்சமா பாதகங்கள் இல்லாது போகும் உள்ளம் தூய்மையானதாக இருக்கும் உள்ளத்தை தூய்மையான வைத்திருந்தால் அதிலே பொறாமை நிலை கொள்ளாது தூய்மையுள்ள உள்ளத்தினர்களாக அனைவரும் ஆலயம் சென்று வழிபடுவதானது நன்று பலீபிடத்திற்கும் சுவாமி சன்னதிகுள்ளும் சுவாமி வலது கை எப் பக்கம் இருக்கிறதோ அந்த பக்கமாக நின்று எதிர்ப்புறம் உங்கள் தலையிருக்கும் படியாக தரையில்ப் படித்து நமஸ் காரம் செய்தல் வேண்டும்.

கோயில் பிராகாரத்தை வலம் வரும் போது இடமிருந்து வலமாக வலம் வர வேண்டும் கோயில்கள் அனேகமாக ஐந்து பிராகாரங்களை கொண்டதாக அமைந்திருக்கும் எமது விநாயகர் ஆலயமும் ஐந்து பிரகாரங்களைக் கொண் டதாக அமையப்பெற்றுள்ளது ஒவ்வொரு பிரகாரத்தையும் வலம் வரும் போது ஒவ்வொரு புலனையும் அடங்கி இறைவனிடம் மனதைச் செலுத்தி இறையருளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கான வழிகளைக் கடைபிடிக்க வேண்டும் பிராகாரங்களை சுற்றி முடித்ததும் மீண்டும் சன்னதிக்கு வெளியே நின்று வணங்க வேண்டும் பின்னர் இரு புறங் களிலும் உள்ள துவார பாலகர்களை வணங்கி அடுத்ததாக நந்தியையும் வணங்கியதும் விநாயகரை மூன்று முறை தோப்புக்கரணம் போட்டு வணங்கிவிட்டு உள்ளே சென்று சிவலிங்க தரிசனமும் அம்பாள் தரிசனமும் செய்து கொள்ள வேண்டும்.

அர்ச்சனை நிவேதனம் கற்புர ஆரத்தி ஆகியவை முடிவுற்றதும் இறைவனை மெய்யன்போடு மனமுருக உள்ளத்திலிருத்தி வழிபட்ட பின்னர் விபூதி வாங்கி சிவ... சிவ... என மனதிற்குள்ச் சொல்லி உச்சரித்தும் நெற்றிலே பூசிக் கொள்ள வேண்டும் பின்னர் சந்தனம் குங்குமம் பிரசாதம் வாங்கி நெற்றியில் இட்டுக்கொள்ள வேண்டும் நாம் ஐம்புலன்களையும் அடக்கியே பக்தியின் உண்மை யான பயனைப் பெற முடியும் கோயிலின் பின் கோபுர மானது மூலஸ்தான அளவிற்கேற்ப முன் கோபுரத்தை விட சற்று சிறியதாக இருக்கும் அதிலே விநாயகரின் ஐந்து முகங்களும் ஐந்து தட்டுக்களின் வடிவிலேயும் அமைந் திருக்கும் முருகன் ஆலயங்களாக இருந்தால் ஆறு படை களும் தட்டுக்களாக அமைந்திருக்கும் நவசக்தி ஆலயங் களாக இருந்தால் அங்கே ஒன்பது தட்டுகளாக கோபுரம் அமையப் பெற்றிருக்கும் கோபுரங்களில் இறைவனுடைய ஐந்தொழில்களும் காட்டபட்டிருக்கும் (ஒன்று) படைத்தல் பிரம்மா இரண்டு காத்தல் விஸ்ணு (மூன்று) அழித்தல் உருத்திரன் (நான்கு) மறைதல் மகேஸ்வரன் (ஐந்து) அருளல் சதாசிவம் என ஆலயங்களில் முன் கோபுரம் பின் கோபுரங்கள் ஆகிய இரண்டு கோபுரங்களிலுமே இறைவனு டைய இந்தச் செயற்பாடுகள் அமையப் பெற்றிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தனு தான தரண புவன போகம் என்பவற்றை கொண்டே உலகத்தை படைத்தார் என்பனவாக அனைத் தும் அமைந்திருக்கும் அத்தோடு கோபுரத்தின் மேல் சங்கு கள் பறவைகள் சமூத்திரங்கள் மலைகள், ஏரிகள் என அனைத்துமே தெய்வங்களுக்குரிய கலை சிறப்புகளாக செதுக்கப்பட்டு வர்ணம் தீட்டபட்டிருக்கும் உலகத்தில் வாழும் எல்லா உயிரினங்களும் இறைவனாலேயே படைக் கபட்டவைகள் என்பதாலும் எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் அன்பு செலுத்துபவர் என்பதாலேயும் இவைகள் அனைத்துமே ஆலயங்களின் கோபுரங்களில் சேர்க்கப் பட்டிருக்கும் கோயில் கோபுரமானது இறைவனின் திருவடியைக்குறிக்கின்றது கோயிலின் வெளிக்கோபுர வாயிலில் மேல் உள்ள மாடங்களை ஒற்றைப் படையி லேயே அமைப்பார்கள் ஐந்துமாடங்கள் கொண்டவை ஐம் பொறிகளைக் குறித்து நிற்கும் ஏழு மாடங்கள் ஐம்பொறி களுடன் மனம், புத்தி ஆகியவற்றைக் குறிக்கும் ஒன்பது மாடங்கள் மேற்கண்ட ஏழுடன் சேர்ந்து சித்தம் அகங்காரம் அகியவற்றை குறித்து நிற்கும் "எவ்வதுறைவது உலகம் உலகத்தொடு அவ்வதுறைவது அறிவு" என்பது வள்ளுவர் வாக்கு திருக்கோயில் வழிபாட்டில் ஒவ்வொரு தெய்வத்திற் கும் உரிய வழிபாட்டு முறைகளை கடைபிடித்து வழிபடல் வேண்டும் ஆலயங்களில் செய்யத்தக்க விடயங்களை அனுசரித்துச் செய்வதும் செய்யத்தகாத விடயங்களைத் தவிர்த்து நடப்பதும் நல்லது.

கோயில் என்பது ஒரு புனிதமான இடமாகும். அது இறைவனின் அருள் நிறைந்த இடம் கோயில் அசுத்த மடையாமல் தூய்மையாகவும் துப்பரவாகவும் வைத்திருத் தல் வேண்டும் ஆன்மா சென்று சேர்வதற்குரிய இடம் என்ற வகையில் ஆலயம் அமையப்பெற்றுள்ளது நாம் ஆலயத்தினுள் வழிபாட்டிற்கென வந்து அமர்ந்து விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலுள்ளவர்களினது யாருடையதும் வம்பு பற்றிக்கதைப் பது என்பதும் அவதூறான விடயமாகும் இறைவனுக்கு அவை விரும்பதகாத விடயமும் ஆகும் ஆகவே ஆலயத் தினுள் இறைவனுடன் இரண்டறக்கலந்து மனதை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு இறையருளைப் பெற முயற்சி செய்தல் நல்லது "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையார் உரைத்த முதுமொழி களில் ஒன்றாகும் கோயில் உள்ள ஊரிலே நாம் குடியிருப் பதும் கூட இறைவன் எமக்களித்த வரப்பிரசாதம் தானே ஒரு மனிதன் நல்லவனாக சமூகத்தில் வாழ்கின்றான் என்றால் அவன் நிச்சயமாக இறைபக்தி உடையவனாகவும் இருப்பான்.

இறைவன் மேல் நம்பிக்கை கொண்டு இறைவனை பக்தியுடன் வழிபடுவோருக்கு இறைவன் தவறான எண்ணங்களைக் கொடுப்பதில்லை அவர்களை நல் வழிப்படுத்தி நல்ல முறையிலே வாழ வைப்பார் அதற்காக கெட்ட எண்ணம் கொண்டவர்களும் கூட அப்படியே கெட்ட வர்களாக இருந்து விடாமல் நல்லவர்களாக மாறமுடியும். யாரோ ஒருவருக்கு கெடுதல் செய்ய மனம் நினைக்கும் போது கடவுளே இந்த கெடுதல் நான் செய்ய நினைப்பதை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றீர்களே இறைவா அடுத்த வரிற்கு நாம் செய்ய நினைக்கும் கெடுதல் திரும்பி அது எனக்கே வந்து விடும் இறைவா எனக்கு இப்படி எழும் கெட்ட எண்ணங்களை அகற்றி விடுங்கள் என்று நாம் இறை வனிடம் கேட்க வேண்டும் இறைவனை மெய்யன்போடு மனதிலே இருத்தி வழிபட்டால் மனம் தூய்மையடைந்து கெட்ட எண்ணங்கள் பொறாமைகள் அனைத்தும் இல்லாது போகும் நல்லவர்களாக வல்லவர்களாக எங்களை வாழ வையுங்கள் நல்ல எண்ணம் சிந்தனைகளோடு எங்களை வாழ வையுங்கள் என்று தானே இறைவனிடம் கேட்டு வழிபட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை மெய்யன்போடு வழிபடுவதன் மூலமும் கெட்ட எண்ணங்கள் இல்லாத போதும் தான் ஒருவன் சமூகத்தில் நற்பிரஜையாக வாழ்கின்றான். நமது ஊரில் கோயில் இருப்பதும் நமது மனதிலே கோயில் இருப்பதும் ஒன்றாகும் நமது மனதிலிருந்து கெட்ட எண்ணங்களை அகற்றுவதன் மூலம் நமது மனதையும் கோயிலாக்க முடியும் கெட்ட எண்ணங்கள் இல்லாத இதயமும் இறைவன் குடியிருக்கும் கோயிலாகவே அமைகின்றன எமது ஊரில் பிறந்து வழர்ந்து வந்தவரான ஒருவர் என்னிடம் சொன்னார் அவர் வந்து ஒவ்வொரு நாழும் அதிகாலை எழுந்தவுடன் நீராடிவிட்டு பிள்ளையாருக்கு வீட்டிலோ அல்லது பிள்ளை யார் ஆலயம் வந்தோ நாளாந்தம் பூ வைத்து வணங்கி வழிபட்டு வருவதும் என அது அவருடைய வழமையான விடயமாம் ஒரு நாள் காலை எழுந்து நீராடி விட்டு பூக்களைப் பறித்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்று பூவைக் கழுவு வதற்காக தண்ணீர் அள்ளும் போது தூலா மரம் தூலாவி லிருந்து கழன்று தனக்கு மோலே விழுந்து விட்டதாம் சத்தம் கேட்டு ஐயோ!.... என்ற பிள்ளை என பெற்றோரும் உற்றார்களும் ஓடி வந்து பார்த்த போது தனக்கு எதுவுமே நிகழவில்லையாம் அந்த ஆபத்திலிருந்து தன்னை காப்பாற்றியவர் தான் வழிபடும் இந்த பிள்ளையார் தான் என மனமுருக அந்தச் சம்பவத்தை என்னிடம் சொன்னார் “இறைவனை நம்பினோர் கைவிடப்படார் என்றும் எம்முடன் இருப்பவரும் கடவுளே எமது ஊரிலே வாழ்ந்து கொண்டி ருந்த இன்னும் ஒருவர் என்னிடம் சொன்னார் தனக்கு இல்லாத ஒன்றை வேண்டுமென்றே ஒருவர் பொறாமையில் கதைத்ததற்காக தான் போயிருந்து பிள்ளையாரிடம் ஏன் இறைவா இந்த மனிதர்களுக்கு இப்படியான பொறாமை எனக்கு இல்லாத ஒன்றை இப்படிக் கதைத்து வேதனை ஏற்படுத்துகின்றார்களே எனக்கடவுளிடம் கேட்டபோது ஒரு நாள் கடவுளே வந்து நான் இருக்கின்றேன் அதற்காக நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையடையாதே என்று தான் வழிபடும் பிள்ளையாரே மனித உருவில் வந்து தன்னிடம் சொன்னதாகச் சொன்னார் ஆகவே கடவுளை தூய மனதோடு வழிபடுவதன் மூலம், இறையருளைப் பெறமுடியும் கிண்ணையடியைச் சேர்ந்த இன்னும் ஒரு பெரியவரிடம் கதைத்த போது சொன்னார் "எத்தனையோ விதமான இன்னல்கள் துயரங்கள் எமக்கு ஏற்பட்ட போதெல்லாம் எம்பெருமான் எமது ஊரிலே இருந்த தினாலேயெ அவைகள் எல்லாம் இல்லாமல்ப் பொயிற்றுது என்றார்" எமது ஊரிற்கு எந்த விதமான ஆபத்துக்களும் ஏற்படாமல் காப்பாற்றியவரும் எம்பெருமான் தான் என்றார் பிள்ளையாரை மனமுருக நினைத்து பெருமையுடன் சொல்லிக் கொண்டார் அப்படி ஒவ்வொரு செயலிலும் கூட இறைவன் இருக்கின்றார். ஒருபோதும் யாரும் கடவுளை மறந்து தீய செயல்களைச் செய்யக்கூடாது ஆலயங்களில் நாம் வழிபாடு செய்யும் போது திருவுருவங்களின் தாற்பரி யத்தை அறிந்து வழிபாடு செய்தல் வேண்டும் இறைவனின் மேலான இருப்பிடமே விக்கிரகங்களாகும் பிரணவ சொரூ பியான பிள்ளையார் இவர் யானை முகத்தோடும், தும்பிக்கையும் விசாலமான செவிகள், நான்கு கரங்கள் பெரிய வயிறு போன்றனவாகக் காணப்படுவார் இவரைச் சிரசிலே மூன்று முறை குட்டியும் செவியை மாறி இரு கைகளாலும் பிடித்து மூன்று முறை தோப்புக்கரணம் போட்டும் நிலத்தில் விழுந்து ஆண்கள் அட்டாங்க நமஸ் காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும் விநாயகருக்குரிய தேவாரமான

திருச்சிற்றம்பலம்

**"பிடியதன் உருவுமை கொளமிகுகரியது**
**வடிகொடுதனதடி வழிபடும் அவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறையே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருவாக்கும் செய்கருமம் கைகூடும்
செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கை கூப்புவர் தம்கை"

திருச்சிற்றம்பலம்

போன்ற தேவரங்களைப் பாடி வழிபடுதலும், மலரும், அறுகம் புல்லும் கொண்டு விநாயகர் வழிபாட்டுக்குச் செல்வதும் சிதறு தேங்காய் அடித்து வழிபடுதலும் சிறப்பானது இவைகள் யாவும் விநாயகர் வழிபாட்டிற்குரியன வாக அமைகின்றன நாம் வழிபடும் விநாயகப் பெருமானின் தோற்றம் அற்புதமானது விலங்கு மனிதன், பூதம், தேவர் என நால்வகை கலப்போடு கூடியது விநாயகரின் யானைத் தலையானது விலங்குவடிவமானது உடம்பு மனிதவடிவ மானது பெருவயிறு பூதவடிவமானது நான்கு கைகளும் தெய்வ வடிவமானது கணபதிக்கு 16 வடிவங்கள் இருக் கின்றன. (ஒன்று) பால கணபதி (இரண்டு) தருண கணபதி (மூன்று) பக்தி கணபதி (நான்கு) வீர கணபதி (ஐந்து) சக்தி கணபதி (ஆறு) த்வஜ கணபதி (ஏழு) பிங்கள கணபதி (எட்டு) உச்சிஸ்ட கணபதி (ஒன்பது) விக்ன கணபதி (பத்து) சிம்ர கணபதி (பதின் ஒன்று) வேரன்ப கணபதி (பன்னிரண்டு) லக்ஸமீ கணபதி (பதின் மூன்று) மகா கணபதி (பதின் நான்கு) விஜய கணபதி (பதின் ஐந்து) நர்தன கணபதி (பதின் ஆறு) ஊர்துவ கணபதி எனது மாவட்டமான களுதா வளை சுயம்புலிங்க ஆலயத்திலே கணபதியின் இந்த பதினாறு வடிவங்களும் விக்கிரகங்களாக அமைந்திருக் கின்றன பார்ப்பதற்கே மிகவும் பக்திப்பரவசமாக இருக் கின்றன விநாயகரின் இந்த வடிவங்கள் அனைத்தும் மனிதர்களிடயே ஒருவருக்கு ஒருவர் பொறாமை கொள்வ தெல்லாம் தீய செயலாகும் தீய எண்ணங்கள் இருப்பவர் களிடம் பொறாமை என்பது இலகுவில் உருவாகி விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் அடுத்த மனிதன் மீது அன்பு செலுத்தியே வாழ வேண்டும் என்று தான் கடவுள் பூலோகத்தையும் அதிலே மனிதர்களையும் உருவாக்கினார்.

பொறாமை என்னும் கொடிய பேய் நம்மிடம் உருவாக நாம் இடமளிக்க கூடாது தீய எண்ணம் எம்மில் எழும் போதும் கூட நாம் இறைவனை நினைக்கலாம் இறைவா எனக்கு அவர்கள் எதுவும் செய்யவில்லயே ஆனால் எனக்கு மட்டும் அவர்களுக்கு தீமை செய்ய வேண்டும் என்ற எண்ணம் வருகிறதே இப்படியான எண்ணம் எனக்கு வராமல் எனது பொறாமையை அகற்றிவிடுங்கள் என இறைவனை வேண்டினால் இறைவன் உங்கள் உள்ளத்தை நிச்சயமாக தூய்மைப்படுத்துவார்.

கெட்டவர்கள் எப்பவுமே கெட்டவர்களாக மட்டுமே இருக்க கூடாது தீய எண்ணம் கொண்டவர்கள் எல்லோருமே நல்லவர்களாகியே நாட்டில் வாழ வேண்டும் அதுதான் கடவுளின் விருப்பமும் கூட முன்னர் இலங்கையாட்சியில் 1505ம் ஆண்டு தொடக்கம் 1658ம் ஆண்டு வரையான காலங் களை போத்துகேயரே இலங்கையை ஆட்சி செய்தனர் அந்தக் காலபகுதியில் போத்துகேயர் நிறையவே தீய செயல்களைச் செய்திருக்கிறார்கள் வற்றாபளை கண்ணகி ஆலயத்தை போத்துகேயரான நெவில் என்பவர் சென்று அழிக்க முற்பட்டதையும் அதற்காக பெரிய காற்றாகி கண்ணகி அம்மன் கோயிலில் நின்ற பன்னிச்சை மரம் தானாக தனது காய்களை நெவில் மீது வீசி ஆலயத்தை அழிக்க விடாமல் தடுத்த வரலாறுகளும் இருக்கின்றன.

அந்தக் காலப்பகுதியில் திருக்கேதீச்சர ஆலயமும் போர்த்துக்கேயரால் அழிக்கபட்டது யாழ்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் போத்துகேயர் காலத்தில் பிலிப்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி வெறா என்பவரான போத்துகேயரால் அழிக்கபட்டது அப்போது கோயில் குருக்களாக இருந்தவர் ஆலயத்தின் விக்கிரகங்கள் சிலவற்றைப் பாதுகாத்து மறைத்து வைத்திருந்தார் என்றும் பின்னர் அந்த விக்கிரகங்களை வைத்தே ஒல்லாந்தர் காலத்தில் மீளவும் 1734ம் ஆண்டு காலபகுதியிலே மீண்டும் ஆலயம் கட்டப்பட்டதாகவும் அறிந்தோம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினுள் போத்துகேயரான அசலிடோ என்பவர் நுளைந்து ஆலயத்தை அழிக்க முற்பட்ட போது அந்த ஆலயத்தில் அமர்ந்திருந்த நந்தி எழுந்து துரத்தவே ஓடி விட்டார் அதனாலேயே அந்த ஆலயங்கள் அழிக்கபடாமல் இருந்தன.

போத்துகேயர்கள் ஆலயங்களில் மேற்கொண்ட அடா வடித் தனங்களினுடாகவே இறைவனுடைய அற்புதங்களை யும் நாம் அறிந்து கொண்டோம் இறைவன் என்றுமே உண்மையானவர் மெய் அன்போடு வழிபடும் பக்தர்களில் நிறைந்து உறைந்துள்ளவர் அப்பொழுது போர்த்துக் கேயருக்கு சைவ சமயத்தின் மீது கோபமா? கடவுள் மீது கோபமா? ஆலயத்தின் மீது கோபமா? இலங்கை தமிழர் மீது கோபமா? அவர்களின் பண்பாட்டின் மீதும் கலாசாரத் தின் மீதும் கோபமா? ஏதோ சைவ ஆலய பக்த அடியார் களையும் துன்புறுத்தி ஆலயங்களுக்குத் தாங்களே சென்று அழித்தும் வந்தனர் நீண்ட காலங்களுக்கு பிறகு மீண்டும் தமிழர் மத்தியில் உருவான சில தவறானவர்கள் ஆலயங் களை மதிக்காமல் ஆலயங்களில் தங்கள் தவறாக இயக் கும் கருவிகளையும் இயக்கி அப்படியான தீயவர்களின் செயல்களை ஆலயங்களில் மேற்கொண்டு வந்திருந்தனர்.

ஆகவே இப்படி செய்வது தவறு என அவர்களுக்கு சொல்வதன் மூலம் நமது ஆலயங்கள் அசுத்தமடையாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கவும் முடியும் நீதியும் நேர்மையும் மறைந்து போன போலியான முகங்கள் யாவும் தவறானவர்களின் பின்னால் செல்லும் நிலைமையினை மனிதர்களாகியவர்கள் யாவரும் விட்டு விடுவது நல்லது

சில தவாறனவர்கள் இப்படித்தான் தாங்கள் தவறாக நடப்பது மட்டுமன்றி அடுத்தவர்களையும் தவறிழைக்கத் தூண்டுவார்கள் இது தேச விரோதச்செயலாகும் நமக்கு நல்ல கருத்துகளை கூறும் பெரியவர்களின் சொற்கேட்டு அவர்களின் கருத்துகளை மதித்து நடப்பதன் மூலம் எமக்கு இறைவனின் அருள் கிடைக்கும் எனவும் சொல்லப்படு கின்றது அடுத்தவரை மதித்து நடவாத அகங்காரம் ஒரு மனிதனுக்குவரக் கூடாது என்பார்கள் சமூகத்தில் வாழும் ஒருவர் அடுத்தவரை மதித்து நடக்கத் தெரிந்திருத்தல் நல்லது ஒருவரை மதித்து நடக்கத் தெரிந்த நல்ல பண்புகள் இருந்தாலே பொறாமை, வஞ்சகம், இல்லாது போகும் சமூகமும் சமயமும் என்னும் போது ஒரு சமூகம் என்பது நல்லதாக அமைய வேண்டும் என்றால் சமய வழிபாடுகளை கடைப்பிடித்து வந்தால் அகம்பாவம் என்பது குறைந்துவிடும் ஒருமனிதன் மனிதம் கொண்டு மனச்சாட்சியுடன் வாழ்வ தற்கு இறைவழிபாடு வழியமைக்கப்படுகின்றது ஒரு மனிதன் மனட்சாட்சி என்பது இல்லாமல் சமூக வாழ்கை வாழ முடியாது ஒரு மனிதனிடமுள்ள மனச்சாட்சி என்பது தான் அவனிடம் உள்ள பொய், களவு, காமம் போன்ற தீய குணங்களையெல்லாம் கட்டுப்படுத்துகின்றது மனிதரில் மனச்சாட்சி இல்லாதவர்களே தவறிழைப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

மனசாட்சி இல்லாதவர்கள் கட்ட வீழ்ந்து மரத்தில் தொங்கும் கடதாசிப்பட்டம் போன்றவர்கள் அங்கும் இங்கு மாக மனதை அலைய விடும் மிருகங்களுக்கு ஒப்பான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் ஒரு நாட்டிற்கு ஒரு அரசானது முக்கியதுவமானது என ஐந்து வருடத்திற்கு ஒருமுறை ஜனாதிபதி தேர்தல் நாட்டில் வருகிறது மக்களால் தெரிவு செய்யபட்ட ஒரு ஜனநாயக அரசு நாட்டுக்காக அமைக்கப்படுகின்றது ஆனால் அந்த அரசனானது எங்கிருந்தாலும் மூலை முடுக்குகளுக்கு என்ன அநீதிகளோ என்ன விரோதங்களோ யாருக்கு நடைபெற்றாலும் அதனை அறிந்து கொள்பவரா கவும் அதற்கான தீர்வை வழங்கி அதனை இல்லாது செய்வபராகவும் இருப்பார்.

அதுவும் இந்த முறை நாட்டில் யுத்தங்கள் எதுவும் இல்லாது போய் அமைதியான நாட்டில் தேர்தல் இடம் பெற்று நல்லாட்சி என்ற பெயரில் அரசு அமைக்கப் பெற்றிருக்கிறது அரச நிறுவனங்களில் வேலை செய்பவர் கள் தவறானவர்களின் வழிகளில்சென்று தவறிளைக்காமல் நீதி நேர்மையுடன் செயற்பட்டால் அநீதிகள் இடம் பெறாது செயற்பட முடியும் எமது ஊரான கிண்ணையடிக் கிராமம் அமைக்கப்பட்டு (128) நூற்று இருபத்தெட்டு வருடங்கள் பழமை வாய்ந்ததாக இருந்தாலும் ஆனால் இதுவரை ஒரு முன்னேற்றமும் கூட எமது ஊரில் இல்லை ஒரு சன சமூக நிலைமையோ ஒரு தபாலகமோ ஒரு அரச வங்கிகளோ ஒரு வேலை தளங்களோ இல்லை மிகவும் பின்தங்கிய நிலையை நோக்கியே தள்ளபடுகின்ற இடமாகவும் இருந்து வருகின்றது பல கீலோமீற்றர் தூரம் நடந்தே சென்று வரும் இடமாகவும் கிண்ணையடி ஊர் இருக்கிறது காலை ஆறு மணிக்கும் பிற்பகல் இரண்டு மணிக்கும் ஒரு பேரூந்து மட்டுமே வந்து போகும் நமது ஊரை நல்ல நிலமைக்கு கொண்டு வர வேண்டும்.

என்று நினைப்பவர்களாக யாரும் இதுவரை இருக்க வில்லை என்பதும் இதற்கு ஒரு காரணமாகவும் இருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு ஊர்பற்று என்பது இருக்க வேண்டும் நாம் கிண்ணையடியிலே பிறந்து வளர்ந்தவர்கள் எமது ஊரில் இருந்து நாம் ஒருவராவது பாராளுமன்றம் செல்ல வேண்டும் எமது ஊரிற்கும் என்ன குறைகள் இருக்கிறதோ என அதனை விளங்கி கொண்டு நாமும் அரசிடம் கதைத்து நமது ஊரை மேம்படுத்த வேண்டும் என்று நினைக்கின்ற மனநிலை இருக்கவேண்டும் அந்த மனநிலை ஏற்படும் போதுதான் பொறாமை என்பது ஏற்படாமல் ஒவ்வொருவரின் மனதும் சுத்தமாக இருக்கும் வரப்பு உயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் நெல் உயரக் குடி உயரும் குடி உயரக்கோன் உயர்வான் என்ற ஔவையாரின் முதுமொழிக் கிசைவாக வேளாண்மை மட்டுமே அதிகமாக பயிர் செய்ய படும் ஊர்தான் கிண்ணையடிக் கிராமம் என்பதால் ஊர் பற்றும்கொண்டு எமது ஊரையும் முன்னேற்ற வேண்டும்.

இங்கு அதிகமாக மதுபானம் அருந்துபவர்களும் வேலை வாய்பைத் தேடி அரபு நாடுகளுக்குச்செல்லும் ஆண்களும் பெண்களுமே அதிகமாக இருக்கும் இடமாக வும் இருக்கிறது இதனால் அதிகமாக சீர்கேடுகள் தானே இடம் பெறும் ஆகவே தான் எமது ஊரிற்கு ஒரு கைதொழில் சம்பந்தமான வேலைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டு வேலை வாய்பினை வழங்கினால் பெண்கள் அரபு நாடுகளுக்கு வேலைக்கு செல்லும் நிலைமையை குறைக்க முடியும் ஒரு தையல் நிலயம் அல்லது ஒரு பப்படம், ரொபிகள், மிக்சர் உற்பத்தி செய்யும் கம்பனிகள் அமைக்கப்பட்டால் ஒரு சிறு வேலை தானும் செய்து கொள்ளும் பெண்கள் அரபு நாடு களுக்கு போக விரும்ப மாட்டார்கள் இதனால் நிறையவே சமூக சீரளிவுகளைக் குறைக்க முடியும் எங்கே குறைகள் இடம் பெறுகிறதோ அங்கே நிறைகளை நிறைவாக ஏற்படுத் தும் போதும் தவறுகள் இடம்பெறுவதும் குறைவடையும் நல்லாட்சி அரசின் கடைகண் பார்வையானது எமது ஊரிற்கு கிடைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாக இருந்து தவறானவர்கள் ஏற்படுத்தி வரும் அநீதிகளையும் வஞ்சகங்களையும் இல்லாது செய்ய வேண்டும் நமது கலாசாரம் என்பது பண்பாடு என்பது ஆலய வழிபாட்டோடு தொடர்புபட்ட விடயம் தான் யார்? கலாச்சாரமான பண்பாடுடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக ஆலயத்தினையும் மதித்து நடக்க கூடியவர்களாகவும் இருப்பார்கள் யார் தாங்கள் மனதையும் அசுத்தமாக வைத்து கொண்டு தவறாகவும் அநீதியாகவும் நடந்து கொள்கிறார்களோ அவர்களால் இது ஆலய புனித மான இடம் என நினைத்து ஆலயத்தினை மதித்து நடக்க தெரியாது ஆகவே தவறிளைப்பவர்கள் ஆண்டவரை வேண்டி வழிபட்டு மனதை சுத்தபடுத்தி ஆலயத்தினையும் சுத்தமாக பேண உதவுங்கள் நாம் தை மாதம் 14ம் திகதி உழவர் திருநாள் என்று தைபொங்கல் தினத்தை கொண்டா டுகின்றோம்.

உழவருக்கு வெளிச்சம் கொடுத்து அவர்களையும் வாழ்கையிலே உயர வைத்த சூரியனுக்காக நன்றி செலுத் தும் நாளாக அந்த நாளில் பொங்கலிட்டு கரும்பும் செங்கனிகளும் கொண்டு சூரியனுக்கு படைத்து வழிபடு கின்றோம் அதன் பின்னர் ஆலயங்களுக்கும் சென்று வழிபடுகின்றோம் வழிபட்டதன் பின்னர் வீட்டிற்கு வந்ததும் அன்றைய மதிய உணவில் மச்சம் மாமிசம் போன்றவை களை சமைத்து உண்னுகின்றோம் இது அனேகமாக நடை பெறுகிறது.

ஆனால் இது தவறான விடயம் சூரியனுக்குப் பொங்க லிட்டுமுடித்ததும் அன்றைய நாளை எமக்கொரு விரத நாளாகவே நினைத்து அன்றய நாளில் மரக்கறி வகை களை சமைத்து உண்ண வேண்டும் யாழ்பாண மாவட்டங் களில் எல்லாம் அன்றைய தினம் மச்சம் மாமிசம் எடுப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை மரக்கறிதான் சமைப்பார்கள் அது தான் உண்மை யிலே நாம் சூரியனுக்கு செலுத்தும் நன்றியாக அமையும் எமது ஆலயத்திலே தரிசன மண்டபத்தில் வலது பக்கத் திலே மஞ்சள் நிறத்திலான பிள்ளையார் அமர்ந்து இருக் கிறார் 1980ம் ஆண்டிலேயே தான் வேறு ஒரு இடத்தில் இருந்து எமது ஆலயத்திற்காக மஞ்சள் நிற பிள்ளையாரை கொண்டு வந்திருந்தனர் வந்த உடனே அந்தக் காலப்பகுதி யிலே மஞ்சள் பிள்ளையாரை கோயிலில் முன் கதவு முகற் பிற்கு மேலே வைத்தனராம் அப்பொழுது எமது ஆலயத் தினுடைய கோபுரங்கள் அமைக்கபடவில்லை தானே அவ்விடம் தட்டையானதாகவே அமைந்திருந்து அதற்கு மேலே பிள்ளையாரை அமரச் செய்வோம் என வைத்திருக் கின்றனர் ஆனால் ஒர் இரு தினங்களில் அந்தக் கால பகுதியில் கோயிலின் பூஜை பண்ணிக் கொண்டிருந்த பூசகரிடம் கனவிலே தோன்றிய பிள்ளையார் சொன்னாராம் என்னை மேலே தூக்கி வெயிலுக்குள்ளே வைத்திருக்கிறீர் கள் என்னை உள்ளே இறக்கி வையுங்கள் என்று.

அப்படியான மிகப் பெரும் அற்புதம் வாய்ந்தவராக எமது மஞ்சள்ப் பிள்ளையாரும் விளங்குகின்றார் வேண்டும் வரத்தினை பக்தர்களுக்கு வழங்குபவராகவும் எமது பிள்ளையார் அமைந்துள்ளார் ஆரம்பத்திலே 1915ம் ஆண்டிலே ஆலயம் அமைக்கப்பட்டதிலிருந்து மார்கழிமாதத்து திருவெண்பாதினங்களைத்தான் திருவிழாவாகக் கொண்டா டியிருக்கின்றார்கள் 1980ம் ஆண்டிலே தான் திருவிழாவாக மாறி சித்திரை மாதம் பஞ்சமி திதியும் மிருகசீரிடம் நட்சதிர மும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுப வேளையில் திரு விழாக்கள் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு திரு விழாக்கள் இடம் பெற்று சித்திரை 10ம் நாள் சுப வேளை யில் எம்பெருமானுக்கு கிண்ணையடி தீர்த்தகரையில் தீர்த்த உற்சவம் இனிதே இடம் பெற்று மாலை கொடியிறக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்துடன் திருவிழா இனிதே நிறைவுபெற்று வருகிறது எமது கிண்ணையடி பிள்ளையார் ஆலயம் அமைக்கபட்டதிலிருந்து மூன்று முறை கும்பாபிஷேகம் நடந்து இருக்கின்றது 1980ம் ஆண்டு முதலாவது முறையாக கும்பாபிசேகம் இடம் பெற்றுள்ளது பின்னர் 1992ம் ஆண்டு இரண்டாவது முறையாக கும்பாபிசேகம் இடம் பெற்றது அதன் பின்னர் 24 வருடங்களிற்கு பின்னர் 2016ம் ஆண்டு மூன்றா வது முறையாக கும்பாபிசேகம் மிகவும் சிறப்பான முறை யில் இடம்பெற்றது.

இந்த கும்பாபிசேகத்திற்கு மட்டுமே நீண்ட கால இடை வெளி ஏற்பட்டிருந்தது நாட்டின் யுத்தங்கள் நடை பெற்றது ஒரு காரணமும் பின்னர் ஆலயம் இடிக்கபட்டு புதிதாக அமைக்கபடுவதற்காக எடுத்த கால அவகாசங்களே நீண் டனவாக அமைந்ததும் ஒரு காரணங்களாகும் பிள்ளையார் ஆலயங்களில் பன்னிரெண்டு வருடத்திற்கு கொரு முறை தான் கும்பாபிசேகம் இடம் பெறும் 1904ம் ஆண்டு எமது ஆலயம் அமைக்கபட்டதிலிருந்து 1910ம் ஆண்டு வரை கணபதி மாரிமுத்து எனப்படுகின்ற குடும்பத் தினரே பிள்ளை யாருக்கு நாளாந்தம் தண்ணீர் ஊற்றி பூவைத்து வணங்கி வருந்திருகின்றனர் பின்னர் 1911ம் ஆண்டிலிருந்து 1930ம் ஆண்டு வரையான காலங்களில் காளிக் குருக்கள் பூசகராக இருந்திருக்கின்றார். அதிலிருந்து 1950ம் ஆண்டு வரை இராசமணி குருக்கள் பூசகராக இருந்திருக்கிறார் அதிலிருந்து 1980ம் ஆண்டு வரை கிண்ணையடியை சேர்ந்த வைத்தியலிங்கம் ஐயா பூசகராக இருந்துள்ளார்.

அதிலிருந்து 1985ம் ஆண்டு வரை மட்டக்களப்பை சேர்ந்த உத்தமகுமார் என்னும் குருக்கள் பூசகராக இருந்துள்ளார் 1985ம் ஆண்டு தொடக்கம் 1990ம் ஆண்டு வரை கோரகல்லிமடுவை சேர்ந்த கார்மேகன் ஐயா பூசகராக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கிறார் 1990 இலிருந்து 1995 வரை சுதன் ஐயா பூசகராக இருந்துள்ளார் 1995ம் ஆண்டிலிருந்து 2000ம் ஆண்டு வரை காமதாஸ் ஐயா பூசகராக இருந்திருக்கிறார் பின்னர் 2000ம் ஆண்டு தொடக்கம் 2002ம் ஆண்டு வரை திருமாறன் ஐயா பூசகராக இருந்திருக்கின்றார் 2002ம் ஆண்டு தொடக்கம் 2006ம் ஆண்டு வரை மகேந்திரன் ஐயா பூசகராக இருந்திருக்கிறார் 2006ம் ஆண்டிலிருந்து 2013ம் ஆண்டு வரை புலேந்திரரூபன் சர்மா ஐயா பூசகரராக இருந்திருக்கின்றார் 2013ம் ஆண்டிலிருந்து கிண்ணைய டியை சேர்ந்த ஜெயசீலன் பத்மநாதன் ஐயாமார் 2016ம் ஆண்டு வரை இருந்ததிருக்கின்றனர் 2016ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டு வரை வெருகலைச்சேர்ந்த விஸ்ணு ஐயா பூசகராக இருந்திருக்கின்றார் 2017ம் ஆண்டு தொடக்கம் 2019 இன்று வரை செங்கலடியை சேர்ந்த சிவலிங்கம் நந்த குமார் ஐயா பூசகராக இருந்து வருகிறார் 2008ம் ஆண்டு புலேந்திரரூப சர்மா ஐயர் கிண்ணையடி ஆலயத்திலே பூசகராக இருந்த காலப்பகுதியிலே தான் ஆலயம் இடிக்கப் பட்டு மீளவும் புதிதாக புனருத்தானம் செய்யப்பட்டால் நல்லது என்று புலலேந்திர ரூப சர்மா ஐயர் கூறியதற் கமைவாக எமது ஆலயம் இடிக்கப்பட்டது.

கருவறையினுள் வீற்றிருந்த பிள்ளையார் ஒரு சிறு பாலஸ்தானம் அமைக்கப்பட்டு அதனுள்ளே அமர்த்தப் பட்டார் 2008ம் ஆண்டு தொடக்கம் 2016ம் ஆண்டு வரை ஆலயம் புதுபிக்கப்டும் புணருத்தானப்பணிகள் இடம் பெற்றது அன்றிலிருந்து இது வரையும் ஆலயத்தில் திரு விழாக்கள் எதுவும் இடம்பெறவில்லை மூலஸ்தானத்திற்குள் பிள்ளையார் இருப்பதானதை இறைவனின் குழந்தைப் பருவ காலம் என்பார்கள் அதனாலே தான் அதனை சுற்றி வழிபடு தலும் கூடாது என்பார்கள் அதுவரையும் திருவிழாக்கள் இடம்பெறாது கும்பாபிசேகம் மேற்கொள்ளுதலை திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்கு என்றும் கூறுவர் திருமுழுக்கு என்பதை பருவ மடைந்தல் என்றும் கூறுவர். எட்டு வருடங்களின் பின்பே ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு 2016இல் 06ம் மாதம் 30ம் திகதி மூன்றாவது முறையாக கும்பாபிசேகம் இடம்பெற்றது. அதன் பின்னரே புதிய ஆலயம் திறக்கப்பட்டு இப்பொழுது திருவிழாக்களும் வருடந்தோறும் இடம்பெற்று வருகின்றன.

அநேகமாக ஒவ்வொரு ஆலயத்திலும் பன்னிரண்டு வருடங்களிற்கொரு முறை கும்பாபிசேகம் மேற்கொள்வார் கள் கும்பாபிசேகம் மேற்கொள்வதற்கான காரணங்களாக அமைவது யாதெனில் ஆலயங்கள் புதிதாக அமைக்கப் பட்டால் அல்லது ஆலயங்கள் இடித்து மீளவும் கட்டப்படும் சந்தர்பங்களில் அந்த ஆலயங்களிலே கும்பாபிசேகம் மேற் கொள்வார்கள் அந்த ஊரில் உள்ளவர்களின் குற்றங் களை பாவங்களை நீக்குவதற்காகவே கும்பாபிசேகம் இடம் பெறுகின்றது பாவவிமோட்சனங்கள் பெறுவதற்காக கிராம சாந்திகள் மேற்கொள்வதைப் போன்றது தான் ஊரில் இடம் பெறும் கும்பாபிசேகம் கும்பாபிசேகத்தை குடமுழுக்கு என்றும் சொல்வார்கள் ஆலயம் புனருத்தானம் செய்யபட்டு கும்பாபிசேகம் இடம்பெறும் காலங்களில் எண்ணைக்காப்பு வைபவமும் இடம்பெறுவதுன்டு அதே போன்று 2016ம் ஆண்டு 06ம் மாதம் 27ம் திகதியன்று எமது ஆலயத்திலே முதல் முறையாக எண்ணைகாப்பு வைபவமும் இடம் பெற்றது.

எமது ஊரில் உள்ள பக்த அடியார்கள் யாவரும் திரள் திரளாக திரன்டு வந்து எம் பெருமானுக்கு எண்ணை வைத்து எம் பெருமானின் அருளை பெற்று சென்றனர் கோயில் என்பது இறைவன் குடியிருக்கும் இடம் என்பது மட்டும் இல்லை நமது பண்பாடுகள் வளர்க்கப்படும் இடமா கவும் இருக்கின்றன ஆகவே பண்பாட்டை சீரளிக்கும் இடமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தினை யாரும் பேணக்கூடாது ஆலயம் இடிக்கபட்டு மீளவும் புதுபிக்கபடுகின்ற நோக்கம்! கருவறையினுள்ளே ஆரோகணித்திருக்கும் விநாயகப் பெருமானை பார்த்தால் என்பதுமே எமது கண் நிறைந்த எமது மனம் நிறைந்த ஒரு அலங்காரம் நிறைந்த ஒரு உயிருள்ள புதுப்பொலிவு நிறைந்த ஒருவராகவே எமக்கு காட்சி தருபவராக இருக் கிறார் அதே போல ஆலயங்களின் சுற்றுப்புறங்களிலும் இருக்கிற துவாரபாலகர்களும் வேறு ஆலயத்தின் வரலாற்று பொக்கிசங்கள் யாவும் மங்கிப்போகாமல் எப்பவுமே புதுப் பொலிவுடன் இருக்க வேண்டும் என்றே ஆலயம் இடிக்கபட்டு மீளவும் புதுபிக்கப்படுகின்றது ஆலயங்கள் ஒவ்வொரு முறையும் இடிக்கப்பட்டு புதுப்பிக் கப்படும் போது ஆலய சுற்றுப் பிரகாரங்களிலும் அமைய பெறாமல் விடுபட்டிருந்த துவாரபாலகர்களை சேர்த்து வேறு ஏதாவது வரலாற்று சம்பவங்களும் சேர்க்கப்படாமல் விடுபட்டிருந்தால் அவைகள் சேர்க்கபட்டும் கூட ஆலயம் புதிதாக அமைக்கப்படும் பிறகு பாலஸ்தானத்திற்குள் வீற்றிருந்த விநாயக பெருமான் ஆலயத்தின் கருவறையி னுள் அமர செய்யும் போதே குற்றம் கழிதலுக்காகவென்றே கும்பாபிசேகம் இடம்பெறுவதுண்டு அதன்படியே தான் எமது ஆலயத்திலும் கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது. அதன் போதே எண்ணைகாப்பு வைபமும் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த கௌரவ ஐயப்பதாச ஐயா குழுவினர்களினாலேயே எமது ஆலயத் திற்கான கும்பாபிசேகம் இடம்பெற்றது அதனைத் தொடர்ந்தே எமது ஆலய திருவிழாக்களும் இடம் பெறத்தொடங்கியது 2017ம் ஆண்டு திருவிழா மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்றன ஆலயங்களில் பத்து அல்லது அதற்கு மேற்பட்டதான பன்னிரெண்டு நாட்கள் வரை மிகச் சிறப்பாக பூஜைகள் நடத்தி ஆலங்களில் உள்ள மூர்த்திகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவங்களை பல விதமான வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து நடத்துவிற்கும் விழாவிற்கே திருவிழா என்று பெயராகும் திருவிழாவினை மகோற்சவம் என்றும் குறிப்பிடுவர் மகோற்சவத்தினை மகா என்றால் பெரியது என்றும் உற் என்பது உயர்வானது என்றும் சவம் என்பது ஐந்தொழில் என பொருள்படும்.

மகோற்சவம் என்பது உயர்வான உன்னதமான படைத் தல் முதலிய ஐந்தொழிலைக் குறிப்பது என்பனவாகும் உற்சவம் எனப்படுவது மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையும் கொடுப்பதாகும் சிவபெருமான் ஐந்தொழில் களால் உயிர்களைக் காக்கும் முறையைதான் மகோற்ச வம் உணர்த்துகிறது மனிதர்களுக்கு கடவுள் சொல்லுகின்ற விடயம் யாதேனில் உன் கண் முன்னால் தெரிகிறவர்களை உன் கண் முன்னால் நிற்பவர்களை நேசிக்கப்பழகு அப்படி யெல்லாம் நேசிக்க தெரிந்த ஒருவரால்த்தான் கண்ணுக்கு தெரியாத என்னையும் நேசிக்க முடியும் என்கின்றார் ஆண்ட வனுடைய ஒரே நோக்கம் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டு வாழும் போதுதான் வஞ்சகமும் பொறாமையும் இன்றி வாழ முடியும்.

என்பதே சமூகத்தில் தவறு செய்கிறவர்களைப் பார்த் தால் அவர்களுக்கு நல்லவர்களைக் கண்டால்ப் பிடிக்காது நாம் எவ்வளவு தவறு செய்து வாழ்கிறோம் அவர்கள் எவ்வளவு நற்பெயருடன் இருக்கிறார்கள் என்பதை நினைக் கும் போது அவர்களும் எழுகின்ற குற்ற உணர்வுகள் தான் அவர்களும் பொறாமையை ஏற்படுத்துகிறது ஆகையினால் தான் தவறிழைப்பவர்கள் நல்லவர்கள் மேல் பொறாமை கொள்கிறார்கள் தூய மனம் கொண்டு இறைவனை வழிபடும் போது எழும் பொறாமை வஞ்சகத்தை இறைய ருள் மூலம் இல்லாது செய்ய முடியும் அதன் பின்னர் 2017ம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு சித்திரை மாதத்திலே மகோற்சவம் ஆரம்பமானதும் திருவிழாவிற்கு முதல் நாள் கொடியேற்ற நாளாக அமைந் திருந்தது அலயங்களில் இடம்பெறும் மகோற்சவமானது கொடியேற்றதுடன் இடம்பெறும் கொடிமரமும் எமது உடலி லுள்ள ஆதாரங்கள் போன்றே அமைந்திருக்கும் தொப்புள் கொடி அமைவிடம் போன்றதாகவே அமைந்திருக்கும். கொடியேற்றத்தில் கொடிமரம் திரைச்சீலை கயிறு என்பன முக்கிய இடம்பெறுகின்றன.

கொடிமரமானது சிவபெருமானையும் பதி கடவுளையும் திரைசீலையானது ஆன்மாவையும் கயிறு பாசத்தையும் குறித்து நிற்கும் கொடியேற்ற முன் ஆன்மாவும் பாசமும் ஒடுங்கியிருக்க சிவம் மாத்திரமாக தோன்றுவதைக் கொடி மரம் காட்டி நிற்கும் கொடி மரத்திலே கொடியேறிய பின் படைப்பு தொழிலான பின்பு ஆன்மாக்களும் பாசமும் தோன்றி நின்று சிவத்தையே ஆதாரமாக கொள்ளும் இது கொடிச்சீலையும் கயிறும்கொடி மரத்திலே தங்கி இருத் தலைக் குறிக்கிறது கொடிச் சீலையிலே ஆன்மாவை குறிப் பதற்காக இடபமும் ஆன்மாவிற்கு அருள் செய்வதற்காக அஸ்திர தேவரும் கும்பமாகிய மங்கலப்பொருட்களும் காணப்படும்.

எமது ஊரிலே உள்ள ஆலயங்களில் உற்சவ காலம் தொடங்கி கொடியேற்றம் நடைபெறும் போது திருவிழா விற்கு வரும் பக்த அடியார்களை உயர்பதம் அடையச் செய்வதற்காக இறைவன் இவ் விழா நாட்களில் சிறப்பாக எழுந்தருளி அருள்பாலிக்கப்போவதையே நோக்கமாக கொண்டு கொடியேற்றம் இடம் பெறுகிறது கொடியேற்ற நாளில் எல்லா தெய்வங்களையும் அழைத்து இந்த மகோற்சவத்திலே அமர்ந்திருக்கும் வண்ணம் தான் கொடி யேற்றப்படுகிறது சிவமய சக்தி பக்தி விசுவாசம் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் அருள் கிடைக்கப் பிரார்த்தனை மேற்கொள்ள படும் பதி, பசு, பாசம் அடங்கியதாக மூன்று கயிறுகள் திரிக்கப்பட்டே கொடியேற்றபடுகின்றது. இந்தக்கயிறானது ஐம்பூதங்களையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் கொடிச் சீலையை கொடி மரத்திலுள்ள கயிற்றிலே கட்டி கும்ப தீர்த்தம் தெளித்து கொடிப்படத்தில் இடப தேவரைப் பூஜித்து பின் சகல தேவர்களையும் அழைத்து மங்கல வாத்தியத் தாலும் தோத்திரதாலும் உபசாரஞ் செய்த பின் விநாய கருக்கு தேங்காய் உடைத்து கொடியேற்றப்படும் கொடி யேற்றப்பட்டால் பக்கத்து ஊரிலுள்ள கோயில்களிலும் திரு விழாக்கள் எதுவும் இடம் பெறாது கொடியேற்றத்தின் போது சுவாமிக்குக் காப்புப் கட்டுதலும் இடம் பெறும் ஐயரும் கூட காப்பினைக் கட்டிக் கொள்வார் திருவிழா முடியும் வரை பூசகர்மார் ஊர் எல்லையைத் தாண்டக் கூடாது என்றும் பூசகர்கள் திருவிழாவை இடையூறின்றி நடத்தி முடிப்பதற் காகவும் காப்பு கட்டுதல் இடம்பெறும்.

கொடியேறிய பின் ஊரிற்கு மச்சம் மாமிசம் வருவதற்கு எல்லாம் தடை விதிக்கப்பட்டு குற்றங்கள் நீங்கிய ஒரு புனிதம் நிறைந்த இடமாக ஊர் விளங்குகிறது திருவிழாக் களை சாம்பவ தீட்சை எனவும் கூறுவர் ஏனென்றால் தீட்சை பெறாதவர்களுக்கும் தீயோர்களுக்கும் பறவைகள் மிருகங் கள் ஆகியவற்றிற்குக் கூட இந்தத் திருவிழாக்களைக் காணுதலே தீட்சையாகும் என்றும் சொல்லப்படுகின்றது.

ஒவ்வொரு நாளும் கொடிப் பூஜையும் இடம் பெறும் கொடி மரத்தின் அடியினிலே சிவபெருமானுக்குப் பூஜையும் லோக பாலருக்குட்பட்ட தேவர்களுக்குரிய பூஜையும் இடம் பெறுவதுண்டு பின்னர் அஸ்திரதேவரில் ஐந்தொழில்களை யும் செய்து உலகங்களை கடவுள் காப்பாராக என ஆசிர் வாதம் செய்யப்படும் எமது பிள்ளையார் ஆலயத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரத்தினை 2016ம் ஆண்டு ஆலயம் குடமுழுக்குச் செய்யப்பட்ட வருடத்திலே இலங்கேஸ்வரன் சசிப்பிரியை குடும்பத்தினரே கொடி மரத்தினை வழங்கி வைத்தனர் கொடியேற்றத்தின் மறுநாள் இரண்டாம் நாள்த் திருவிழா வாக பக்தி முக்தி பாவனோற்சவத்திருவிழா இடம் பெறும் இதனை அம்பிகா சுபாங்கன் என்பவரின் குடும் பத்தினர்கள் நடத்தி முடிப்பார்கள் கஸ்டங்கள், துன்பங்கள் நீங்கப் பெற்று இறைவனின் அருட்கடாச்சரம் நிறைந்த நாளாகவும் பக்தர்களுக்கு நல்ல பலன்களைத்தரக் கூடியதாகவும் இத் திருவிழா அமையும் மகோற்சவத்தின் போது முதலாம் நாள்க் கிரிகைகளும் இடம்பெறும். முதல் நாள்க் கிரியை யிலே ஊரின் நன்மைக்காக வைரவர் மூர்த்திக்கு கோவி லின் மேற்கு வீதியிலே பூஜை செய்வதை கிராம சாந்தி என்பர். அப்பொழுது வீதியிலே வாஸ்து சாந்தி செய்யப் படும்.

இது வீதியையும் சுத்திகரிப்பதற்காக மேற் கொள்ளப் படுபவை. அப்போது தர்ப்பை வைக்கோல் முதலியவற்றால் செய்யப்பட்ட வடிவத்தை சிவாக்கினியோடு சேர்த்து வீதியிலிழுக்கப்படுதலும் இடம்பெறும் மூன்றாம் நாள்த் திருவிழாவாக தீச்சட்டித் திருவிழா இடம்பெறும் இதனை செல்லத்தம்பி பஞ்சாசரம் குடும்பத்தினர் நடத்தி வைப்பர் இத் திருவிழா பக்த அடியார்களின் குறைகளைத் தீர்ப்பதாக அமைகின்றது. குறைகளை தீர்ப்பதற்காக நேர்த்திகள் வைத்தவர்கள் இந்நாளில் கற்பூரம் நிறைந்து எரியக்கூடிய தீச்சட்டி விழாவினை இறைவனை வேண்டி எடுப்பார் சுவாமி உள் வீதி, வெளி வீதி ஊர்வலம் போகும் போது தீச்சட்டி யினை ஏந்தி பக்த்தர்கள் செல்வதால் அவர்களின் குறைகள் அனைத்தும் இறைவனால் நீங்கப்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம், கன்மம், மாயை எனப்படுகின்ற மும்மலங் களும் அடங்கி இருளோடு இருளாக அனைத்தும் மறைந்து போவதற்காகவே தீச்சட்டி ஏந்தி திருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். மகோற்சவ நிகழ்வுகள் யாவும் பஞ்சகிருத்தியங்களின் படியே நாளாந்தம் இடம்பெறும். சுருக்கமாகச் சொல்வதாயின் கொடியேற்றம் எனப்படுவது படைத்தலையும் தேர்திருவிழாவானது அழித்தலையும், மௌனோற்சவம் என்பது மறைத்தலையும், தீர்த்த உற்சவ மானது அருளையும் குறிக்கின்றன. முன்னர் யுத்த சூழ் நிலைகள் அதிகரிப்பதற்க்கு முன்னர். ஆரம்ப காலத்தில் ஓரளவு திருவிழாக்கள் எல்லாம் இடம் பெறக் கூடியமாதிரி யான நிலமை ஊரில் இருந்த காலங்களில். திருவிழாக்கள் இடம்பெறும் போது நாளாந்தம் கலை நிகழ்வுகளும் எமது ஆலயத்தில் இடம்பெறுவதுண்டு.

விநாயகர், முருகனின் மாம்பழக்கதை வில்லிசையாக வும், காண்டீபன், கள்ளத்தாலி, சிவகாமியின் சபதம் போன்ற நாடகங்கள் எல்லாம் மேடை ஏற்றப்படும் பின்னர். நாட்டில் யுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கியதும் திருவிழாக்களும் இடம் பெறக் கூடிய சூழ்நிலைகள் இருக்கவில்லை அத் தோடு நாடகங்கள் மேடை ஏறுவதும் இல்லாமலே போய் விட்டது. மீண்டும் அமைதியான சூழல் இடம் பெற்றுள்ளது. ஆலயம் புனருத்தானம் செய்யப்பட்டும் மீண்டும் திருவிழாக் களும் இடம் பெறுகின்றன ஆகவே இப்படியான கலை நிகழ்வுகள் இடம் பெறுவதும் கூட ஆலயங்களின் சிறப்பம் சங்ளை மெருகூட்டுகின்றனவாக அமையும்.

அடுத்ததாக நான்காம் நாள்த் திருவிழாவாக வாமனரூப உற்சவம் இடம் பெறும். இதனை நல்லையா குடும்பத்தினர் கள் நடத்தி முடிப்பார்கள் "வாமன ரூபன மகேஸ்வர ருத்ர விக்ன விநாயகபாக பங்கயம் நமேஸ்தே" அசுரர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பதற்காக வாமனரூபம் எனப்படும் அருட்காட்சி எடுத்த வர் விநாயகப்பெருமான் அவருடைய இந்தக் காட்சியை நினைவு கூருவதற்காக இத்திருவிழா கொண்டாடப்படு கின்றது. இறைவனுடைய திருக்காட்சியைக் கண்டு கழிப்ப தற்காக ஊரிலுள்ள மக்கள் அனைவரும் திரண்டு வந்து எம் பெருமானை தரிசித்து அருட்கடாச்சரம் பெற்று பக்த அடியார்கள் யாவரும் மனமுருக இறைவனை தரிசித்து பயன்பெறுவர்.

அசுரர்கள் மக்களை வதம் செய்த போதெல்லாம் இறை வனையே நாடி மக்கள் மன்றாடி வந்தனர் அசுரர்களிடம் இருந்து மக்கனை மீட்பதற்காகவும் காப்பாற்றுவதற்காகவும் விநாயகர் பெருமான் இந்த அவதாரங்களை எடுத்தார் என்பது நினைவு கூறப்படும். அடுத்ததாக ஐந்தாம் நாள்த் திருவிழாவாக ஊர்வலத்திருவிழா இடம்பெறும் இதனை நல்லான் குடும்பத்தினர்கள் நடத்தி முடிப்பார்கள் இன்று வசந்த மண்டபத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டிருக்கும் விநாயக பெருமானின் திருவருளை பக்தர்கள் காண்பதற் காக உற்சவ மூர்த்திகளுடன் அன்று தான் விநாயக பெருமான் முழுமையான காட்சி தருவார் சிறந்த பட்டா பிசேத்துடன் பிள்ளையார் அலங்கரிக்கப்பட்டு பிள்ளை யாரை கௌரவபடுத்தும் பெருவிழாவாக இத் திருவிழா அமைந்திருக்கும். விநாயகப் பெருமானின் இந்த திருக்காட் சியைக் காணவந்திருக்கும் பக்தர்களும் மனமுருக விநாயகப்பெருமானை வேண்டி அருளை பெறுவர். அன்று விநாயகர் ஊர்வலமாக சென்று ஊரை சுற்றி வந்து பக்தர் களுக்கு தரிசனம் வழங்குவார். அடுத்ததாக ஆறாம் நாள்த் திருவிழாவாக மாம்பழத்திருவிழா கொண்டாடப்படுகிறது.

இந்த திருவிழாவினை தம்பிமுத்து குடும்பத்தினர்கள் நடத்தி முடிப்பர் இத் திருவிழாவானது நாரதர் மாம்பழம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினைக் கொண்டு வந்து சிவபெருமானிடம் கொடுத்தார். பிள்ளையார், முருகன் என இரண்டு பிள்ளைகள் இருக் கின்றார்கள். ஒரு மாம்பழத்தினை இருவருக்கும் எப்படி பங்கிட்டுக் கொடுக்க முடியும் என்று சிவபெருமான் யோசித்த போது அந்த நேரம் நாரதர் சொல்லகிறார் இவர் கள் இருவரில் யார் முதலில் உலகை சுற்றி வருகின்றனரோ அவர்களுக்கு தான் இந்த மாம்பழம் வழங்கப்படும் என்கின்றனர். இதோ நான் முதலில் உலகை சுற்றி வருகின்றேன் என முருகன் தனது மயிலிலே ஏறிப் பறந்து செல்கின்றார் மௌனமாக இருந்து யோசித்த பிள்ளையார் அம்மாவும் அப்பாவும் தானே உலகம் என நினைக்கின்றார் அம்மா உமாதேவியாரையும் அப்பாவான சிவபெருமானை யும் சுற்றி வந்து விட்டு அம்மாவும் அப்பாவும் தானே உலகம் நான் அவர்களை சுற்றியதால் உலகையே சுற்றி வந்து விட்டேன் என பிள்ளையார் தாய் தந்தையர் முன் வணங்குகின்றார் விநாயகருக்கே சிவபெருமான் ஞானக் கனியான மாம்பழத்தை வழங்குகின்றார்.

உலகை முதலிலே சுற்றி வருகின்றேன் எனப் பறந்து சென்ற முருகன் வருகின்றார் ஞானக் கனியானது பிள்ளை யார் கையில் இருப்பதை கண்டதும் முருகன் கோபம் கொள்கின்றார் "முதல் பிள்ளை மட்டும் தான் உங்கள் செல்லப்பிள்ளை அல்லவா" எனத் தாய் தந்தையருடன் கோபம் கொண்ட முருகன் போய் பழனி மலையில் அமர்ந்து கொள்கின்றார் அம்மாவான உமாதேவியார் சென்று முருகனை சமாதானப்படுத்தி அழைத்து வருகின்றார் இந்த மாம்பழக் கதையை நினைவு கூருவதே மாம்பழத்திருவிழாவாக இருக்கின்றது. ஞானக்கனியினைப் பெற்ற முழு முதற் கடவுளாகவும், ஞானம் பெற்றவராகவும் எமது விநாயகப் பெருமான் விளங்குகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திற்கு கருத்தானவர் சிவபெருமான் என்பதும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் கருத்தினை அடிப்படையாக கொண்டே நாரதர் இக்கதையினை உரைத்தார் என்பதும் முக்கிய இடம் பெறுகிறது. அடுத்ததாக ஏழாம் நாள்த் திருவிழாவாக திருவிளக்குப் பூஜைத் திருவிழா இடம் பெறுவதுண்டு. இதனை முத்துலிங்கம் குடும்பத்தினர்கள் நடத்தி முடிப்பர். இருளை அகற்றி வாழ்விற்க்கு ஒளியைத் தரும் மகாலட்சுமி கடாச்சரம் நிறைந்த நன்நாளை நினைவு கொண்டே திருவிளக்குப் பூஜைத் திருவிழா இடம்பெறுவதுண்டு இறைவழிப்பாட்டில் திருவிளக்கேற்றி வழிப்படுவதானது பக்தர்களின் மனங்கள் யாவும் ஜோதி மயமாக அமைய அன்றைய தினம் இறைவன் அருள்பாலிப்பார். பக்தர்கள் யாவரும் திருவிளக்கேற்றி வழிபாட்டில் கலந்து கொண்டு சுவாமி வீதி வலம் வரும் போது பலி பீடத்திற்க்கும் பிரதிஷ்டை செய்து உள் வீதி முடிந்த இரட்சா பந்தம் பூஜை முடிந்து பின் சுவாமி வெளி வீதி வலம் வரும். அப்போதெல்லாம் திருவிளக்கை ஏந்திய பக்த அடியார்களும் சுவாமி வீதி வலம் வரும் போது ஒளி வீசும் இலட்சுமி விளக்கை ஏந்தி இருள் அகல வலம்வருவர்.

அப்போது வாயில் முன்னிலையிற் பிரம்மாவையும் வீதியின் எட்டுத்திக்குகளிலும் லோக பாலரையும் அழைத்து அவர்களுக்கு சங்கீதம் முதலிய உபசாரங்கள் செய்யப்படும். சுவாமி வெளி வீதி வலம் வரும் அன்றிரவு தொடக்கம் யாகம் தொடங்கி அக்னி காரியங்கள் வரை யாவும் முடித்து ஒவ்வொரு நாளும் பகலிலும் இரவிலும் பூஜை செய்யப்படும் ஒவ்வொரு நாளும் அஸ்திர தேவரை எழுந்தருளச் செய்து எட்டுத்திக்கிலும் பலியிடுதல் நடைபெறும். சுவாமி வெளி வீதி வலம் வருதல் முடிந்ததும் உள்ளே சென்று சண்டேஸ்வரர் பூஜைகள் யாவும் முடிவுற்றதும் திருவிளக்கை ஏந்திய பக்த அடியார்கள் யாவரும் ஆலயத்தில் இருந்து திருவிளக்கை ஒளிர்ச்சுடரினுடனே இல்லத்திற்க்கும் எடுத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வர் அன்றைய தினம் இறைவனுடைய அருள் இல்லத் திற்கும் கிடைக்கப்பெற்று இல்லம் நிறைவானதாகவும் இலட்சுமி கடாச்சரம் நிறைந்ததாகவும் அமைந்திருக்கும் அடுத்ததாக எட்டாம் நாள்த் திருவிழாவாக வேட்டைத் திருவிழா இடம் பெறும்.

இதனை கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்கள் நடத்தி முடிப்பார்கள். வேட்டை திருவிழாவான இன்று கெட்ட பாவங்கள் செய்து தீய செயல்களில் ஈடுப்பட்டு தீங்கு விளைவித்து வந்த அசுரர்களை விநாயகப்பெருமான் அழித்து பாவ விமோற்சவம் பெற்ற நாளையே இத் திருவிழா நினைவுபடுத்துகிறது. வாமம், அகோரம், சாந்தம், சத்யம், வீரம், என விநாயகப் பெருமானின் பல முகங்கள் தோற்றப்பட்ட நாளாகவும் இந் நாள் அமைந்திருந்தது. பஞ்ச முகம் கொண்டு அகோரம் கொண்டு அசுரர்களை அழித்து விட்டு அன்று முழுவதும் எதற்குமே கோபம் தீராமல் விநாயகப் பெருமான் இருந்தார் என்றும் பின்னர் அறுகம்புல்லை வழங்கிய போது தான் கோபம் தீர்ந்து சாந்தமானார் என்றும் சொல்லப்படுகிறது.

வேட்டைத் திருவிழாவான இன்று கண்டியிலிருந்து எமது ஆலயத்திற்கு யானை கொண்டுவரப்பட்டிருந்தது. வேட்டைத் திருவிழா வினைப் பார்ப்பதற்க்காக எமது ஊர் மக்கள் திரண்டு கிண்ணையடி மைதான வெளிக்குச் சென்ற போது யானையும் எமது ஆலயத்தில் இருந்து வீதி வழியாக ஆடி... ஆடி... அசைந்து... அசைந்து... சென்று கொண்டிருந்தது. அது பக்தர்களின் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அடுத்ததாக ஒன்பதாம் நாள்த் திருவிழாவாக சப்புறத் திரு விழா இடம்பெறும் இதனை இராசமணி குடும்பத்தினர் நடாத்தி வைப்பர் 2017ம் ஆண்டானது இம்முறை தான் எம் ஆலயத்தில் முதல் முதலாக தேர்ரதம் இடம் பெற்றிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. தேர்களை நகரும் கோயில்கள் என்றும் சொல்வ துண்டு ஏனென்றால் கோயில்களின் அமைப்புக்களைப் போலவே தேர்களும் அமைக்கப்பட்டிருக்கும் தேக்கு, கொங்கு, மருது, வேங்கை போன்ற மரங்களையே தேர் செய்வதற்குப் பயன்படுத்துகின்றனர்.

சதுரம், அறுகோணம், எண்கோணம், பதின்கோணம், பன்னிருக்கோணம், வட்டம், நீள் வட்டம், நீள் சதுரம், முட்டைவடிவம், என ஒன்பது வடிவங்களில் தேர் வடிவங்கள் அமைக்கப்படுகின்றது இப்பொழுது மட்டக்களப்பு மாவட்டத் தில் பல ஆலயங்களில் தேர்திருவிழா இடம்பெறுகிறது. என்றாலும் மட்டக்களப்பு மாவட்டத்திலே அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரர் ஆலயத்திலே தான் முதன் முதலில் தேர்த்திருவிழா இடம்பெற்றதாகவும் வரலாறுகளும் இருக்கின்றன. ஆனால் இப்பொழுது கூட அங்குள்ள தேர்தான் காலத்தால் முந்திய தேராகவும் இருக்கின்றதாகவும் அமைந்திருக்கிறது. ஆலயங்களின் தேரோட்டங்களின் போது ஒன்று அல்லது மூன்று அல்லது ஐந்து எனத் தேர்கள் இடம்பெறுவதுண்டு எமது ஆலயத் திலே பிள்ளையாருக்குரிய தேர் அறுகோண வடிவில் இம்முறைதான் அமைக்கப்பட்டது.

சப்றத் திருவிழாவான இன்றைய நாளில் காலை நேரத் திலே காலை இளவெயில் மெல்ல மெல்ல விலகிக் கொண் டிருக்கும் நேரத்திலே அழகாக அலங்கரிக்கப்பட்ட அலங் கார தேரிலே தேர் ஏறி ஆரோகணிப்பதற்காக எம்பெருமான் ஆயத்தமாகின்றார் திருத்தேரானது மகிமைபெற்றது. அழகானரதம், சாமரங்களாலும், தோரணங்களாலும் அலங் கரிக்கப்பட்டிருகின்றன. அதன் நடுவினிலே எம் பெருமான் வீற்றிருக்கப்போகின்றார். சிறிது நேரத்தில் தேர் வல்லாரி இசைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பெருமான் தேரிலே அமர்ந்து கொள்கின்றார். எல்லோரையும் இரட்சிப்பதற்காகவென்று தேரேறி ஆரோ கனித்திருக்கும் விநாயகப்பெருமான் பக்த அடியார்களைப் பார்த்து வருக வருகவென அன்புக்கரம் நீட்டி அழைப்பது போல் இருக்கின்றது அந்தக்காட்சி விநாயகப் பெருமானின் திருக்காட்சியினைக் காணவந்திருக்கும் பக்த அடியவர் களின் அரோகரா அரோகரா என்று மனமுருகி இறைவனை அழைக்கும் கரகோசம் ஆலயம் எங்கும் நிறைந்து காணப் படுகிறது. திருத்தேரிலே எம் பெருமான் பவனி உலா செல்வதற்க்காக ஆயத்தமாகின்றார் தங்களுடைய பாவங்கள் கஸ்டங்கள் நீங்க வேண்டியே அடியவர்கள் இறைவனை நாடுவதுண்டு. தேர் என்பதும் கூட ஒரு வினைச் சொல்லா கும். தேர் என்ற சொல்லில் இருந்து தான் தேர்தல் என்ற தொரு தொழிற்பெயரும் உருவாகியது. தேர் என்றதொரு சொற்பதமானது வாழ்க்கையை ஆராயும் ஒரு செயற்பாடா கவும் இருக்கிறது. சிலர் தங்கள் வாழ்கை நகர்வதைக் கூடதேர் போல எனச் சொல்வார்கள். தேர் எனப்படுகின்ற பெயரே ஒரு மகிமையானதுதான். தங்கள் பாவங்கள் நீங்க வேண்டிய அலை அலையெனத் திரண்டு நிற்கும் பக்த அடியார்கள் திருத்தேரிலே வீற்றிருக்கும் எம் பெருமானை நோக்கி வேண்டுதல் செய்கின்றனர். வழிபடும் போது நம் மனதிலே இருக்கின்ற தீய எண்ணங்கள் அகன்று விட வேண்டுமென்று வழிபடுதல் வேண்டும் நாங்கள் எந்தளவு தான் பாவம் செய்தவர்களாக இருந்தாலும் தேரிலே ஆரோ கணமாய் இருக்கும் விநாயகப் பெருமானை நோக்கி நல்ல முறையிலே வழிபட்டால் நம் பாவங்களும், துயரங்களும் பறந்தோடி விடும் என்பார்கள்.

தேர் நகர்வதற்கு முன் நான் என்ற அகங்காரம் அழிய வேண்டுமென்றே தேங்காய் அடித்தல் இடம்பெறுகின்றது. ஆணவம், கன்மம், மாயை எனப்படுகின்ற மும்மலங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தகர்த்துத்தான் திருத்தேரிக்கு முன்னாலே சிதறு தேங்காய் அடிக்கின்றனர் மகா பாரத்திலேயும் தேரின் கதை ஒன்று இருக்கின்றது. கர்ணனுடன் யுத்தம் செய்வதற்காக யுத்த களத்திற்க்கு அருச்சுனன் சென்றபோது அருச்சுன னுக்கு தேரோட்டியாகக் கிருஸ்ணர் சென்றிருந்தார் கர்ணன் நேர்மையின் நிமித்தம் செயற்படுபவர் என்பதால் அவரை யுத்த களத்திலே தோற்கடிக்க முடியாது என்பதனையும் அறிந்திருந்த அருச்சுனன் தன் தாயாரான குந்திதேவியை கர்ணனிடம் அனுப்பி வரம் ஒன்றினை பெற வைக்கின்றார்.

உனக்கும், அருச்சுனனுக்கும் நடக்கபோகும் இந்த யுத்ததில் யுத்த களத்திற்க்கு நீ சென்றதும் அருச்சுனன் மீது ஒரே ஒரு அஸ்த்திரத்தை (அம்பை) மட்டுமே எய்ய வேண்டும் என்று எனக்கு வாக்களிக்க வேண்டும் என குந்திதேவி தன் மகனான கர்ணனிடம் இருந்தும் வாக்கை பெற்று கொண்டார். அருச்சுனனுக்கும், கர்ணனுக்கும் யுத்தம் ஆரம்பமாகியது. யுத்த களத்திற்க்கு வந்த கர்ணன் தன் தாயாருக்கு வாக்களித்ததன் படியே அர்சுணன் மீது ஒரே ஒரு அஸ்திரத்தை மட்டும் கர்ணன் ஏவினார். அந்த நேரம் கர்ணனின் அஸ்திரம் வரும் மட்டும் கிருஸ்ணர் அருச்சுணனின் தேரை நிலத்திற்கடியிலே பதித்து வைத்தி ருந்து விட்டு கர்ணன் ஒரே ஒரு அஸ்திரத்தை ஏவி முடித்த தும். தான், அருச்சுணன் தங்கள் தேரை மேலே எழுப்பி நின்று கர்ணனுடன் யுத்தம் மேற்கொண்டனர். ஒரே ஒரு அஸ்திரத்தை மட்டும் எய்வேன் என தன் தாயார் கேட்டதற் காக வாக்களித்த கர்ணன் திரும்பவும் அஸ்திரங்களை ஏவ முடியாமல், தான் தாய்க்கு அளித்த வரத்தைக் காப்பாற்றிய உத்தமராய் தன் தாயினாலேயே அந்த யுத்த களத்திலே அர்ச்சுணன் ஏவிய அஸ்திரத்தினால் கர்ணன் இறந்து விடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ணனை யுத்த களத்திலே வெல்ல முடியாது என்பத னாலே தான் இப்படியொரு கபடத்தனமான முறையினா லேயே தான் கர்ணனை அழித்தனர் என்பதும் அன்றைய வரலாறுகளில் இருக்கின்றது. மற்றது முற்புரம் என்னும் கிராமத்திலே அசுரர்கள் மக்களை வதம் செய்து வந்தனர். மக்கள் சிவபெருமானை நாடி அசுரர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றும்படி வேண்டி நின்றனர். முற்புரத்திலே உள்ள அசுரர்களை அழித்து மக்களைக் காப்பாற்றுவதற்காக சிவபெருமான், விஸ்ணு, சூரியர், சந்திரர் தேவர்கள் யாவரும் தேரிலே ஏறி முற்புரம் செல்வதற்காகத் தயாரா கினர் என்றும், அப்போது அவ்விடத்திலிருந்து தேர் நகரவில்லையாம் ஏன் தேர் நகரவில்லையென வினவிய போது தான் விநாயகரை அவ்விடத்தில் நினைக்காமல் விட்டதற்காகவே சிவபெருமானின் தேர் நகரவில்லையெனத் தெரிந்தது. பின்னர் தான் விநாயகரை அவ்விடம் அழைத்து என்ன வேண்டும் விநாயகா எனக்கேட்ட போது தான். எனக்கு முக்கண்ணன் பலி வேண்டும் என விநாயகர் கேட்டாராம் அதன் பின்னர் தான் மூன்று கண்களையுடைய பொருளான தேங்காயை எடுத்து வந்து விநாயகருக்கு முன் அடித்தனர் என்றும் அதன் பின்னரே தான் சிவனின் தேர் நகர்ந்ததாகவும் வரலாறுகளும் உள்ளது. அதனாலேதான் அன்றிலிருந்து தான் தேர் நகர்வதற்கு தயாராவதற்கு முன் பக்தர்கள் சிதறு தேங்காய் அடித்து வழிபடுதலும் ஆரம்பமானது. அதன் பின்னர் சிவபெருமான் முற்ப்புரத் திற்குச் சென்று எதுவும் செய்யவில்லை அவர் சிரித்தது மட்டும் தான் அந்தச் சிரிப்பினாலே தான் முப்புரத்தில் அசுரர் கள் எரிந்தனர் என்றும் சொல்லப்படுகின்றது.

"விநாயகர் துதி"

தந்தன தனதன தந்தன தனதன
தந்தன தனதன தந்தன தனதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரிகப்பிய கரி முகனடி பேணிக்கற்றிடும் மடியவர் புத்தியிலுறைபவர் கற்பக மெனவினை கடி தேகும் மத்தமும் மதியமும் வைத்திடும் அரண்மகன் மற்பொருள் திரள்புய மதயானை மத்தள வயிறனை உத்தமி புதல்வனை முத்தமிழடைவினை முற்படு கின்றனை மட்டவிழ் மலர் கொடு பணிவேனே முப்புர மெரி செய்த அச்சிவனுறை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரா அத்துய ரது கொடு சுப்பிரமணியப்படும் அப்புன மதனிடை யிபமாகி அக்குற மகளுடனச் சிறுமுருகனை அக்கன மண மருள் பெருமாளே "முன்னர் ஒரு தடைவ விநாயகப் பெரு மானைச் சந்தித்த ஒளவையார் விநாயகரை நோக்கி இந்தப் பாடலை புகழ்ந்து பாடிகொண்டிருந்தாராம் என்றும் அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனாரும் சேந்தனாரும் திருக்கைலாயம் சென்று முருகனை தரிசிப்பதற்காகத் தயாராகிக் கொண்டி ருந்தனர் என்றும் ஒளவையாரும் அவர்களுடன் கைலாயம் செல்வதற்காக அவசரமாகவே பாடலைப்பாடினார்.

என்றும் அப்போது விநாயகப் பெருமான் ஒளவையாரி டம் சொன்னாராம் அவசரப்படாதீர்கள் ஒளவையே ஆறுத லாகவே செயலாற்றுங்கள் கைலாயம் செல்லலாம் என்றா ராம் ஒளவையார் ஆறுதலாகச் செயலாற்றிய பின் விநாய கப்பெருமானே ஒளவையாரைத் தன் தும்பிக்கையிலே ஏந்தியவாறு சென்று கைலாயத்திலே விட்டாரென்றும் அதுவும் அங்கு சென்றவர்களான சுந்தரமூர்த்தி நாயனாரும் சேந்த னாரும் சென்று சேர்வதற்கு முன்னரே ஒளவையார் சென்று விட்டதாகவும் சொல்லப்படுகிறது "முப்புர மெரி செய்த அச்சிவனுறை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரா" என்ற வரிகளில் விநாயகப் பெருமானுடைய வீரச் செயலைப் பாடியுள்ளார் ஒளவையார் நீதான் உலகத்திற்கெல்லாம் அதிபதியானவன் நீயின்றி அணுவும் அசையக் கூடாது என்ற வரத்தினை விநாயகப் பெருமானுக்கு சிவபெருமான் தான் வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியான வரத்தினை வழங்கிவிட்டு விநாயகப் பெரு மானை நினைக்காமல் விடலாமா? அதனாலே தான் அச்சிவனுறைரதம் அச்சதை பொடி செய்து தேரை நகராமல்ச் செய்தாராம் விநாயகப் பெருமான் அதன் பின்னர் தேங்காய் அடித்ததன் பின்னரே தான் தேர் நகர்ந்திருக்கின் றது அதே போல இன்றும் அனைத்து பக்த அடியவர்களும் திரண்டு வந்து தேரிற்கு முன்னே சிதறு தேங்காய் அடிக் கின்றனர் அதன் பின்னர் வேதமந்திரங்கள் ஒலிக்கின்றன பக்தர்களின் அரோகரா.... அரோகரா... என்னும் ஆரா வாரங்கள் ஒலிக்கின்றன எமது விநாயகப் பெருமானின் அலங்காரத் தேர் மெல்ல மெல்ல நகரத் தொடங்குகின்றன. விநாயகப் பெருமானின் அலங்காரக் காட்சிகளைக் காண வந்திருக்கும் பக்த அடியார்கள் ஒருவர் பின் ஒருவராக நின்று பக்திப் பரவசத்துடன் வடம் பிடிக்கின்றனர் அனை வரும் வாருங்கள் எமது விநாயகப்பெருமானின் வடம் பிடிப் போம். என எல்லோருமே வடம் பிடித்து விட விநாயகப் பெருமான் அமர்ந்திருக்க தேர் மெது மெதுவாக பக்தர் களின் அரோகரா... அரோகரா என்னும் கரகோசத்தின் நடுவினிலே வீதியிலே பவன் உலா வருகின்றார்.

எம் பெருமான் தேரேறி பவனி உலா வந்து கொண்டிருக் கும் திருக்காட்சியினைக் காண வந்த பக்தர்கள் மனமுருக வழிபடுகின்றனர் தேரேறி மெது மெதுவாக நகர்ந்த எமது விநாயகப் பெருமான் அனைத்துப் பக்தர்களுக்கும் அருள் பாலித்தவராய் தனது வீதி வலத்தினை முடித்துக் கொண்ட தும் பெருமானின் அருள் பெற்ற பக்தர்களும் தங்கள் வீடு களுக்குத் தரும்பினார்கள் மக்களுக்கு ஏற்படும் கஸ்டங்கள், ஆணவங்களைக் குறைப்பதற்காகவே தேர் உற்சவங்கள் இடம் பெறுகின்றன சாதாரணக் குற்றங்களுக்காக சிதறு தேங்காய் அடித்தலும் வேறு ஏதாவது தீராத பாவங்களுக் காக பூசணிக்காய் பலி கொடுத்தலும் கூட இடம் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்து பூசணியானது ஒரு உயிருள்ள பொருளாக தொன்னூறு (90) நாட்கள் உயிர் வாழக்கூயவை என்பதனால் தீராத பாவங்களைக் கூட தீர்க்கக் கூடியதான சக்தி பூசணிக் காய்க்கு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவிழாவில் இறுதியாக இடம் பெறுவது தீர்த்தோற்சவம் ஆகும். பக்தர்கள் தீர்த்தோற்சவத்தில் கலந்து கொள்வதால் நோய்கள், தோசங்கள் நீங்கும் அதனால் எமது உடலில் இறைவன் வந்து நிற்பார் அதனால் எமது ஆத்மா சாந்தியடையும் எமது ஆத்மாவானது சுத்தமாக இருந்தால் அதில் இறைவன் வந்து குடிகொள்வார் நமது எண்ணங்கள் செயல்கள்யாவும் நல்லதாக அமையும் நல்ல மனிதர்களாக வாழ முடியும் எமது ஆத்மா சுத்தமடைய வேண்டுமென்பதற்காகவே தீர்த்தமாடுதலும் முக்கியமாகும் தீர்த்தமாடுதலானது திரோதானா சக்தியாலே தாக்கப்பட்ட ஆன்மாக்களும் பரா சக்தியிலே படிந்து சிவத்தைத் தரித்தலைக் குறிக்கும் தீர்த்தத் திருவிழாவிலே அஸ்திரதேவர் தீர்த்தத்தில் மூழ்குதல் திரோதானா சக்தி பராசக்தியோடு ஒன்றாதலையும் குறிக்கும் ஆலயத்தில் திருவிழா தொடங்கி முடியும் வரை கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்டடிருந்த திரு ஐயப்ப தாச ஐயா குழுவினரே திருவிழாவினை சிறப்பான முறையிலே நடத்தி முடித்தனர்.

ஒவ்வொரு நாளும் சிறப்பான முறையில் பூஜைகளும் இடம்பெற்றது அதனைத் தொடர்ந்து ஐயப்பதாச ஐயாவின் கருத்தரங்குகளும் இடம் பெற்றது எல்லா மக்களுமே கருத்தரங்குகளை (பிரசங்கங்களை) அமைதியாக இருந்து செவிமெடுப்பர் செவிமடுத்தல் மட்டுமன்றி நாம் மேற்கொள்ளும் தவறுகளைவிடுத்து நல்ல முறையிலே வாழவும் பழகுதல் வேண்டும் தவறாக நடப்பவர்கள் தங்கள் தவறை மற்றவர்களுக்கும் பழக்குதல் கூடாது அப்படிச் செய்வதெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா பாவமானது இறைவனால் மன்னிக்க முடியாத செயல் நாம் இறைவனை மதித்து நடத்தல் வேண்டும் அதேபோல இறைவனுக்கு பூஜை செய்யும் குருக்களையும் மதித்து நடத்தல் வேண்டும் குருவானவர் எப்பொழுதுமே இறை வனின் ஒரு உயர்ந்த பக்தி நிலை கொண்டவராக இருப்ப வர் நாம் ஆலயத்தில் மற்றவரை மதித்து நடக்கும் போது நாம் இறைவனை மதித்து நடந்ததற்குரிய மாதிரியான பலன் எமக்குக் கிடைக்கும் அகங்காரம் அகந்தை என்பது மனிதனின் இருக்ககூடாது இவைகள் இல்லாத போது தான் மனிதரில் பண்பு உருவாகும்.

எமது பக்கத்துக் கிராமத்திலே வசித்து வந்து அஞ்சலி என்பவர் தினமும் காலை எழுத்துவுடன் நீராடிவிட்டு தனது ஊரிலுள்ள பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று கோயிலுக்கு பால் கொடுத்து வருபவர் ஒரு நாள் ஆலயத்திற்க்காக பால் எடுத்துச் செல்லும் போது பாதையில் கையில்க் குழந்தை யுடன் நின்றிலிருந்து தாயொருவர் தருமம் தாங்கம்மா என்று அஞ்சலியிடம் கையேந்திய போது இல்லையென்று சொல்லாமல் ஆலயத்திற்காகக் கொண்டு செல்லும் பால் மட்டுமே என்னிடம் உள்ளது என அஞ்சலி தன்னிடமுள்ள பால்ப் போத்தலைக் கொடுத்து விட்டுச்சென்றாள் இப்படி இடையிலே கொடுத்ததற்காக தாய் தந்தையர் பேசுவார் களோ என நினைத்து நடந்தவற்றை தாய் தந்தையரிடம் கூறுகின்றாள் அப்படிச் செய்வதும் கூட கடவுளிற்கே அது கிடைத்து விட்டதென அவர்கள் கூறுகின்றனர் தர்மம் செய்தல் கூட இறைவனிடம் இருந்து நல்ல பலன் கிடைக்க கூடியது.

முன்னைய காலங்களில் இப்படியான தர்மம் செய்பவர் களிடம் கடவுளே மாறு வேடங்களில்ச் சென்று பசிக்குதம்மா எனக்கு உணவளியுங்கள் என்று கேட்டு வாங்கி உணவருந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியிருக்கின்றார்கள் என்பது வரலாறுகளில் இருக்கின்றது தர்மம் வழங்குதலினால் கோடான கோடி புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது அதுதான் ஆலயங் களில் அன்னதானம் வழங்குதல் இடம்பெறுகின்றன தானங் களுள் சிறந்த தானம் அன்னதானம் எனப் போற்றப்படு கின்றது எமது ஆலயத்தில் திருவிழா தொடங்கி முடியும் வரை அன்றைய உபயகாரர்களால் நாளாந்தம் அன்ன தானம் வழங்கப்பட்டது அதுவும் ஏழைகளுக்கும், இல்லாத வர்களுக்கும் பசித்திருப்பவர்களுக்கும் வயிறு நிறைய உணவளிப்பதால் இறைவனைக் காணலாம் என்பார்கள் அதபோல நல்லவர்களையும் பெரியோர்களையும் மதித்து நடத்தல் அவசியமாகின்றது மனிதர்களாகப் படைக்கப்பட்ட வர்கள் யாவரும் மிருகங்கள் போலல்லாமல் ஒருவரை ஒருவர் மதித்து நடத்தலும் கூட அவசியமாகின்றது.

எமது ஆலயத்தில் மேலும் சிறப்பம்சங்களாக அமைந் துள்ளவைகள் யாதெனில் கிண்ணையடிப் பிள்ளையார் ஆலயம் நாடிவரும் பத்தர்களின் நம்பிக்கைகுரிய ஆலய மாக விளங்குகின்றது ஆலயத்தின் தலை விருட்சமாக அரச மரம் இருந்திருக்கின்றது ஆனால் இப்பொழுது அது இல்லா மல்ப் போய்விட்டது காரணம்? இலங்கை நாட்டிலே யுத்தம் ஏற்ப்பட்ட காலங்களில் கிண்ணையடி ஆலயத்திலும் பரா மரிப்பின்றி யுத்த வடுக்களால் சூழப்பட்டடிருந்தமை தான் காரணமாகியது ஆகவே இப்பொழுதும் கூட நாம் ஒரு அரச மரத்தினை ஆலயவெளி வீதீயான பின்புறத்திலே நட்டு வளர்தெடுக்க முடியும் தலை விருட்சமான மரங்களாக ஆலயங்களிலே பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும் வேறு சிறப்பம்சங்களாக எமது ஆலயத்தில் அமைந் திருப்பவைகள் வருடந்தோறும் இடம்பெறும் மகாசிவராத்திரி நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி மாதத்திலே கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதம் சிவராத்திரி ஆகும் சிவராத்திரி என்பது இருட்காலம் "உலக ஒடுக்க நிலையாகிய இரவு சிவனுக்கே உரியதாகும்" அதனாலே அந்த இரவை சிவராத்திரி என்பர் அத்தோடு சிவபெருமான் சோதி வடிவமாகவும் அச் சோதியின் நடுவே இலிங்கோற்பவராகவும் தோன்றிய இரவு தான் சிவராத்திரி எனப் பெயர் பெற்றது அடுத்ததாக சித்திரை, வைகாசி மாதத்திலே எமது விநாயகர் ஆலயத்திருவிழா மிகவும் சிறப்பான முறையிலே இடம் பெற்று வருகின்றன.

அதன் பின்னர் கேதார கௌரி விரதமானது அனுஷ்டிக்கப்படுகிறது சிவனை நோக்கி பார்வதி இருந்த விரதத்தினை நினைவு கூர்ந்தே பக்தர்களார் 21 நாட்கள் கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது அடுத்ததாக முருகப்பெருமானை நினைவு கூரும் முகமாக கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது இவ் விரதமானது ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்துவரும் வளர் பிறையில் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு தினங்களும் அனுஷ்டிக்கப்படுவதால் பக்தர்கள் இவ் விரதத்தினை அனுஷ்டிக்கும் போது செல்வங்கள், சுகபோ கங்கள், நற்புத்திரப் பேறு என்பவற்றை வேண்டி அனுஷ்டிப்பர் கந்த சஷ்டி என்பது முருகப்பெருமான் சூரசங்காரம் செய்து அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காத்த அருட் செயலையும் குறிக்கும் இவ்விரதத்தின் ஆறாம் நாள் "சூரன்போர்" என்னும் சமய நிகழ்வும் இடம்பெறும் இது பெரும்பாலும் முருகன் ஆலயங்களில் மிகவும் சிறப்பான முறையில் நாடக பாணியில் இடம் பெறும் இதன் மூலம் மனிதர்களில் உட்பகைகளாக அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை போன்ற அசுரப்பண்புகளை அழித்து யாவரையும் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழவும் அருள் பாலிக்கும் அடுத் ததாக விநாயகர் சஷ்டி விரதம் இடம் பெறும் கார்த்திகை மாதத்து அபரபட்ச சஷ்டி வரையிலான இருபத்தொரு நாட் கள் அனுஷ்டிக்கப்படும் விரதம் விநாயகர் சஷ்டி விரதமா கும் எமது விநாயகர் ஆலயத்திலே பிள்ளையார் விரதமா னது பக்தர்களினால் மிகவும் பக்தி பூர்வமாக அனுஷ்டிக் கப்பட்டு வருகின்றன போர்த்துக்கேயர் காலங்களிலே சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு வந்த காரணத்தின் பொருட்டாக சைவ ஆலய வழிபாடின்றியதால் சமய அனுட்டானங்களை யும் விரதமிருக்கும் சுதந்திர சிலையும் இல்லாதிருந்தமை யால் நாளடைவில் அவற்றை ஒழுங்குமுறையில் கடைப் பிடிக்கும் தன்மைகளும் அருகிவரத் தொடங்கின பின்னர் ஒல்லாந்தர் காலங்களில் மீண்டும் சமய சுதந்திரம் காணப் பட்டபோது சைவ மக்கள் மீண்டும் சைவ சமய விரதங் களை அனுஷ்டிக்க ஆரம்பித்தனர் அதன் பின்னர் தான் சுண்ணாகத்தை பிறப்பிடமாக கொண்ட வரத பண்டிதர் என்பவரே பிள்ளையார் கதை என்பதனை எழுதினார் அவர் எழுதிய புத்தகத்தின் பெயர் தான் “பிள்ளையார் கதை” என்ற பெயரில் பிள்ளையாரின் அற்புதங்களும் சைவ சமயத்தவர் சைவ மதத்தினை பின்பற்றிக் கடைபிடிக்க வேண்டிய மரபினைகளும் தொகுக்கப்பட்டு இருந்தமையி னாலும் இப்புத்தகத்தின் பெயரின்படியே இப்புத்தகம் படித்து பாராயணம் செய்யப்பட்டமையாலும் இவ்விரதம் பிள்ளையார் கதை, அல்லது பிள்ளையார் காப்பு என உருவாகி விநாயகரின் பக்தர்கள் மத்தியில் முக்கியத்துவம் பெறலா யிற்று விநாயகர் விரதத்தினை அனுஷ்டிப்பதால் நோய் நொடிகள் தீரும் எமக்கு கஸ்டம் எதுவுமே வராது தீராத கடன்கள் இருந்தால் யாவுமே தீர்ந்து விடும் எமக்கு எல்லாமே நன்றானதாகவே அமைந்துவிடும் விநாயகரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் பற்றி அறிந்த பக்த அடியவர்களே அனேகமாக விநாயகர் சஸ்டி விரதத்தினை அனுஷ்டித்தவர்கள் மேலும் பெற்று கொண்ட பயன்கள் பற்றிச் சொல்வதென்றால் சிவபெருமான் முப்புரங்களையும் எரித்தமை உருத்திரன் விருத்திரா சுரனை வென்றமை அகலிகை கணவனை அடைந்தமை வச்சிரமாலி மன்னன் உடம்பில் ஏற்பட்ட கடும்பிணி நீங்கி மன்னனாகி திலோத்தமையை மணந்தமை இராமன் சீதையை அடைந்தமை தர்மனும் சகோதரர்களும் இழந்த அரசை மீளவும் பெற்றமை தமயந்தி நளனை அடைந்தமை பகீரதன் கங்கா நதியை வையத்திற்கு அழைத்தமை, அட்ட தேவனைகள் அட்ட யோகம் அமிர்தம் என்பவற்றைப் பெற்றமை என இப்படியாக பலர் பெற்ற பலன்களை அறிகின்றோம்.

“வெள்ளையெரு தேறும் விரிசடையோன் பெற்றெடுத்த பிள்ளையார் விரதத்தில் பெருங்கதையை உள்ளபடி நோற்றோர் மிகவாழ்வார் நோராதிருந்து கேட்டோருக்கும் வராது கேடு” என்று பிள்ளையார் விரதத்தின் மூலம் பிள்ளையார் கதையினைப்படித்து முடிப்பவர்கள் நிறையவே பயன் அடைந்ததாகச் சொல்லப்படுகிறது இக் கதையினைக் கற்றவர்கள் மட்டுமன்றி நோற்றவர்களுக்கும் கேடுவராது என்றும் அவர்கள் யாவருமே பிள்ளைபாக்கியம் பெறுவர்.

என்றும் பிறப்புகளில் நல்ல பெரும் செல்வம் பெற்று சிறந்து வாழ்வர் என்றும் சொல்லப்படுகிறது பிள்ளையார் விரதம் என்னும் போது எமக்கு இலக்கணசுந்தரியின் கதை யும் ஞாபகத்திற்கு வருவதுண்டு விக்கிரமாதித்தனின் மனைவியான இலக்கணசுந்தரி என்பவர் விநாயகர் சஷ்டி விரதத்தினை அனுஷ்டித்து வந்தாரென்றும் தொடர்ந்து 21 நாட்களும் அனுஷ்டிக்க முடியாமல்ப் போனதாகவும் ஒரு நாள் இலக்கணசுந்தரிக்கு தண்ணீர் தாகம் ஏற்ப்பட்டதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் கட்டியிருந்த பிள்ளையார் காப்பினை அறுத்து காய்ந்த கொவ்வைக் கொடியில்ப் போட்டு விட்டு தண்ணீரைப் பருகி னார் என்றும் கூறப்படுகிறது.

காய்ந்திருந்த கொவ்வைக் கொடி காப்பு விழுந்த உடனே படர்ந்து துளிர் விடத்தொடங்கியது என்றும் அந்தக் காப்பினை எடுத்து தான் கட்டிக்கொண்டாள் என்றும் அதனால் அவளுக்கு இரட்டிப்பு அருள் கிடைக்கபெற்றது என்றும் பின்னர் விக்கிரமாதித்தனின் கனவிலே தோன்றிய பிள்ளை யார் இக்கதையினை விக்கிரமாதித்தனிடம் கூறியதற்கமை வாக மன்னன் இலக்கணசுந்தரியை புறம் தள்ளி வைத்தான் என்றும் அதன் பின்னர் அவள் பல இன்னல்களுக்கு உட் பட்டாள் என்றும் வணிகன் வீட்டிற்கு அவள் சென்ற பொழுது அவனிடமிருந்த முத்துக்கள் எல்லாம் கல்லாகி விட்டன. என்றும் உழவன் வீட்டிற்க்கு சென்ற பொழுது அவனிட முள்ள வளர்பயிர்கள் யாவும் அழிந்தன என்றும் குயவன் வீட்டிற்க்குச் சென்ற பொழுது அவனின் குயகலங்கள் யாவும் உடைந்தன என்றும் மாலை கட்டுபவன் வீட்டிற்க்கு சென்ற பொழுது மாலைகள் யாவும் பாம்பாகின என்றும் பின் அவள் ஔவையார் வீட்டிற்குச் சென்ற பொழுது ஔவையாரைக் கண்டவர்கள் தூற்றினர் என்றும் சொல்லப்படுகிறது.

ஔவையாரும் பக்தியால் முதிர்ந்து மகிமை பெற்றவரா வார் தானே அவளை அந்நிலையிலே விட விருப்பமில்லை பின்னர் ஔவையார் அவளை விசாரித்து யாரென அறிந்து கொண்டார் பின்னர் விநாயகர் சஷ்டிவிரதத்தினை அனுஷ் டிக்கச் செய்தார் இருபத்தொரு இழைகள் கொண்ட காப்புக் கட்டி படையல் படைத்து ஔவையார் பிள்ளையார் கதை யினைப் படித்தார் இலக்கணசுந்தரி அதனைக் கேட்டு முறைப்படி விரதமிருந்தாள் அவ்வாறு அவள் விரதமிருந் தமையால் ஒரு பலகாரமும் சிறிதளவு நீரும் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் அவனது படைகளான குதிரை யானைகளுக்குக் கொடுத்தும் முடிவடையாமல் இருந்தன என்றும் இவ்வா றான அதிசயத்தைக் கேள்விப்பட்ட அவளது கணவனாகிய விக்கிரமாதித்தன் அவளை மீண்டும் ஆராவாரங்களுடன் வந்து அழைத்துச் சென்றான் என்றும் விநாயகர் சஷ்டி விரதத்தின் மகிமையில்க் கூறப்படுகிறது.

ஆகவே விநாயகர் விரதம் மகிமை பெற்றது இறை வனை நம்பினோர் கைவிடப்படார் என்பதனையும் விநாயகர் விரதத்திலிருந்து நாம் விளங்கிக் கொள்கிறோம். மற்றது ஔவையாரைப் போன்றவர்களாக நம்மில் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்று பார்த்தால் யாருமே இல்லை ஒரு தவறு இழைப்பவர்களைக் கண்டு பேசாதிருத்தல் நல்ல தல்ல பேசாமல் இருக்கின்றோம் என்றால் அவர் அந்தத் தவறைச் செய்யட்டும் என்றே பார்த்திருக்கின்றோம் என்பது தான் அர்த்தம் ஆகவே நாமும் ஔவையாரைப் போன்ற வராகவே அடுத்தவர்களிற்கும் உதவி செய்பவர்களாக இருக்க வேண்டும் தவறிழைப்பவர்களைக் கண்டால் "ஏன் இந்தத் தவறைக் செய்கின்றாய் அப்படிச் செய்யாதே" என்று தவறிழைப்பவர்களுக்கும் நல்லவழி காட்டுவதே சிறப்பான மனித குணங்களாகும்.

அப்படி அடுத்தவர்களிற்கு நல்லவழி காட்டுபவர்களை இறைவனுக்கு மிகவும் பிடிக்கும் அடுத்ததாக எமது ஆலயத் திலே சிறப்பம்சங்களாக அமைந்தவைகளுள் நவராத்திரி விரதமும் அனுஷ்டிக்கப்படுகின்றன சக்தியை நோக்கி அனுஷ்டிக்கும் விரதங்களில் நவராத்திரி விரதமும் ஒன்றாகும் நவம் என்பது ஒன்பதையும் இராத்திரி என்பது இரவு என்பதையும் குறித்துப் பொருள் தந்து நவம் + இரவு என இவைகள் இணைந்து ஒன்பது இரவுகள் கொண்டாடப் படுவது நவராத்திரி எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதம் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை தொடக்கம் நவமி ஆகவுள்ள ஒன்பது நாட்களும் அனுஷ்டிக்கப்படும் விரதமாகும் இவ்விரத காலத்தில் இரவில் நடாத்தப்படும் பூஜை சிறப்பா னதாகவும் முதல் மூன்று நாளும் துர்க்கை தேவி சொரூப மாகவும் அடுத்த மூன்று நாட்களும் இலட்சுமி உருவாகவும் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதி வடிவாகவும் பாவித்து குடும்பம் முதலானவற்றில் ஆவாகணஞ் செய்து பூஜை செய்பவர் முதலாம் நாள்ப் பூஜையினை கணபதிப்பிள்ளை லோகிதன் குடும்பத்தினர்கள் நடத்தி வருகின்றனர்.

நவராத்திரியில் முதல் நாள்ப் பூஜையில் கும்பம் வைத் தலும் இடம் பெறும் ஒரு வட்டப் பாத்திரத்தில் மண் நிரப்பி அதிலே நவதானியங்களைத் தூவி நீர் தெளித்து அப்பாத்திரத்தின் மேல்க் கும்பம் வைப்பர் அதன்பின் அக் கும்பத்தில் அன்னையை எழுந்தருள அதட்டித்து நிற்கச் செய்வர் நவராத்திரி விரதகாலம் தொடக்கம் முடியும் வரை கடலை, அவல், பஞ்சாமிர்தம், வடை, கற்கண்டு போன்ற பிரசாதங்களை படைத்து வழிபடுவதுடன் பாக்கு, வெற் றிலை, பழங்கள் என்பவற்றையும் வைத்து தூப தீபங்களை யும் காட்டியும் தோத்திரங்களைப் பாடியும் பக்தியுடன் வழிபடுவார்கள் இரண்டாம் நாள்ப் பூஜையினை இராம லிங்கம் சிவா குடும்பத்தினர்கள் நடத்தி வருகின்றனர்.

நவராத்திரி விரதத்தின் போது கொலுவைத்தலும் கூட இடம் பெறும் ஆலயங்களிலும் வீடுகளிலும் கொலுவைத்து வழிபடுவதன் தத்துவம் யாதெனில் சக்தி ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் அனைத்துப் பொருட் களிலும் அனைத்து ஜீவராசிகளிலுமே நிற்க்கின்றனர் அச் செயலில் வடிவம் தான் பல விதமான பொம்மைகள், பாவை கள் முதலானவற்றைக் கொலுவைத்து நவராத்திரியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுதலாகும் நவராத்திரியில் மூன்றாம் நாளப் பூஜை யினை சுந்தரம் நற்குணம் என்பவர் நடாத்தி வருகின்றார்.

இதன் நான்காம் நாளப் பூஜையினை தம்பிராசா றஞ்சித மலர் என்பவர் நடத்தி வருகின்றார் இதன் ஐந்தாம் நாளப் பூஜையினை இராமக்குட்டி சிதம்பரப்பிள்ளை என்பவர்கள் நடத்தி வருகின்றனர் இதன் ஆறாம் நாளப் பூஜையினை திருமதி இராமநாதன் நித்தியலட்சுமி என்பவர் நடத்தி வருகின்றனர் இதன் ஏழாம் நாளப் பூஜையினை கந்தையா கோபாலப்பிள்ளை என்பவர் நடத்தி வருகின்றார் எட்டாம் நாளப் பூஜையினை இராமநாதன் இலங்கேஸ்வரன் என்பவர் நடத்தி வருகின்றார் இதன் ஒன்பதாம் நாளப் பூஜையினை கணபதிப்பிள்ளை ராஜி என்பவர் நடத்தி வருகின்றனர் நவராத்திரியில் ஒன்பதாம் நாள் மகா நவமி என வழங்கப் படும் மகா நவமி அன்றான இரவில் எல்லா சைவ வீடுகளி லும் சரஸ்வரி தேவிக்கும் பூஜை செய்து வழிபடுவர் இதனை ஆயுத பூஜை என்றும் சொல்வர்.

சரஸ்வரி தேவியின் திருவுருவத்திற்கு முன் மாணவர் தங்கள் பாடப்புத்தகங்களை வைத்தும், பிரசாதங்கள், கனிவகைகளையும் நிவேதித்தும் வழிபடுவர் படிக்கின்ற மாணவர்கள் இருக்கின்ற வீடுகளில் நவராத்திரி விரதித்தினை அனுஷ்டிப்பதால் மாணவர்களுக்கான கல்வி மேலோங்கும் அடுத்ததாக எமது ஆலயத்தில் திருவெண்பா பூஜையும் மிகவும் சிறப்பான முறையிலே இடம்பெறும் சிவபெருமானை நோக்கி அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் மார்கழி திரு வெண்பா விரதமும் ஒன்றாகும் இவ் விரதத்தை மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடிய நிறை மதி நாளில் அனுஷ்டிப்பர் அத்துடன் திருவெம் பாவையின் வழிபாட்டுக்குரிய பத்துத் தினங்களின் இறுதி நாளாகவும் திருவாதிரை அமைகின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருச்சிற்றம்பலம்"

**"முத்து விதான மணிப்பொற்கவரிமுறையாலே**
**பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே**
**வித்தகக் கோல வெண்டலை மாலை**
**விரதிகள் அத்தனாரூ ராதிரை**
**நாளா லது வண்ணம்"**

"திருச்சிற்றம்பலம்"

சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரை ஆகும் அதனால் சிவபெருமானை இந் நாளில் ஆதிரையான் எனவும் போற்றுவர் மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சதிரத்தில் சிவபெருமானை பக்தர்கள் வேண்டித்தரிசிப்பார்கள் மார்கழித் திருவாதிரை நாளின் சிறப்பினை சம்மந்தர் "ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்" என்று பாடியுள்ளார் சிவனடியார்கள் இவ் விரத நாட்களில் உபவாசம் இருந்து இறைவனை மனம், மொழி, மெய்களால் வழிப்படுவர் அதிகாலை வேளையில் ஆலயத்திற்குச் சென்று திருவெண்பாவைப் பாடல்களைப்பாடி இறைவனைத் தரிசிப்பர் இதன் முதலாம் நாள்ப் பூஜையினை கணபதிப் பிள்ளை, முருகுப்பிள்ளை என்பவர்கள் நடத்தி வைப்பர்.

இதன் இரண்டாம் நாள்ப் பூஜையினை முருகன், கனக சூரியன் என்பவர் நடத்தி வைப்பார் இதன் மூன்றாம் நாள்ப் பூஜையினை வைத்தியலிங்கம், புண்ணியமூர்த்தி என்பவர்கள் நடத்தி வைப்பார் இதன் நான்காம் நாள்ப் பூஜையினை கறுவத்தம்பி – மயில்வாகனம் என்பவர் நடத்தி வைப்பார் இதன் ஐந்தாம் நாள்ப் பூஜையினை ஞானமுத்து - திருச்செல்வம் என்பவர் நடத்தி வைப்பார் இதன் ஆறாம் நாள்ப் பூஜையினை செல்லத்தம்பி – நரேந்திரன் என்பவர் நடத்தி வைப்பார் இதன் ஏழாம் நாள்ப் பூஜையினை செல்லத்தம்பி – தவராஜா என்பவர்கள் நடத்தி வைப்பார் இதன் எட்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்ப் பூஜையினை சின்னவர் - சண்முகம் என்பவர் நடத்தி வைப்பார் இதன் ஒன்பதாம் நாள்ப் பூஜையினை பூபாலப் பிள்ளை – லிங்கன் என்பவர் நடத்தி வைப்பார் இதன் பத்தாம் நாள்ப் பூஜையினை கதிரவேலி தேவமலர் என்பவரகள் நடத்தி வைப்பர் இதன் பதினோராம் நாள்ப்வைரவர் பூஜை யினை பிள்ளையான் - சின்னவன் என்பவர் நடத்தி வைப்பர் திருவெண்பாவை தீர்த்தமானதும் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெறும் மங்கையர்கள் யாவரும் பார்வதி தேவியினை நினைவு கூரும் வகையில் மஞ்சள் நீரிலே குளித்தே தீர்த்தத்திற்குச் செல்வார் எமது ஆலயத்திலே விசேட தினப் பூஜைகள் அனைத்தும் மிகவும்' சிறப்பான முறையில் இடம் பெறும் புதுவருடத்தினத்தன்று புது வருடப் பூஜை இடம்பெறும் இதனை குழந்தைவேல் - கந்தசாமி என்பவர் நடத்தி முடிப்பர் அடுத்ததாக தைப்பொங்கல்ப் பூஜை இடம் பெறும் இதனைக் கணபதிப்பிள்ளை அருணா சலம் என்பவர் நடத்தி முடிப்பர் அடுத்ததாக தைப்பூசம் பூஜை இடம்பெறும் இதனை செல்லத்தம்பி – கமலநாதன் என்பவர் நடத்தி வைப்பர் அடுத்ததாக சிவராத்திரிப் பூஜை இடம் பெறும் இதனை திரு.சபாபதிப்பிள்ளை – தர்மபாலன் என்பவர்கள் நடத்தி வைப்பார்கள் அடுத்ததாக சித்திரைப் பூஜை இடம்பெறும் இதனை இளையதம்பி – கணபதிப் பிள்ளை என்பவர் நடத்தி வைப்பர் அடுத்ததாக ஆடி அமாவாசைப் பூஜை இடம்பெறும் இதனை தம்பிமுத்து – வேல்நாயகம் என்பவர் நடத்தி வைப்பர்.

அடுத்ததாக சித்திரைப்படிப்பு பூஜை இடம்பெறும் இதனை ஆறுமுகம் - அருளேந்திரன் என்பவர் நடத்தி வைப்பர் அடுத்ததாக ஆவணிச்சதுர்த்தி இடம் பெறும் இதனை கணேஸ் - கேசவன் என்பவர் நடத்தி வைப்பர் அடுத்ததாக ஆனி உத்தரப் பூஜை இடம் பெறும் அடுத்ததாக ஆனி மகம் பூஜை இடம்பெறும் அடுத்ததாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த சங்காபிசேகப் பூஜை இடம் பெறும் இதனை சுதாகரன் குடும்பத்தினர் நடத்தி வைப்பார்கள் அடுத்தாக தீபாவளிப் பூஜை இடம் பெறும் இதனை கிருஸ்ணப்பிள்ளை நாகேந்திரன் என்பவர் நடத்தி வைப்பர் அடுத்ததாக கார்த்திகை விளக்கீட்டு பூஜை இடம் பெறும் இதனை கதிர் காமத்தம்பி என்பவர் நடத்தி வைப்பர் அடுத்ததாக விநாயகர் காப்புப் பூஜை இடம் பெறும் விநாயகர் காப்பு விரதம் தொடங்கி 14 நாட்களும் விநாயகர் சஷ்டி அனுஷ்டிக்கப்படும் பக்தர்களால் ஒவ்வொரு நாட்களும் பூஜை நடாத்தப்படும்.

அதன் பின்னர் 15ம் நாள் காப்புப் பூஜையினை சிதம்பர பிள்ளை ரமேஸ்வரன் என்பவர் நடத்தி வைப்பர் அடுத்ததாக இருத்தைப் பூஜையினை முத்துவேல் என்பவரின் குடும்பத் தினர்கள் நடத்தி வைப்பார்கள் அடுத்ததாக அமாவாசைப் பூஜை இடம்பெறும் இதனை சிறிசேன, ரஜீசீலன, மாத்தையா, புஸ்பாகரன், காத்தமுத்து, கிருஷ்ணப்பிள்ளை, சின்னத்தம்பி, ரவிச்சந்திரன் என்பவர்கள் நடத்தி முடிப்பார் கள் அடுத்ததாக பெருங்கதை பூஜை இடம்பெறும் இதனை பொன்னுச்சாமி குடும்பத்தினர்கள் நடத்தி வைப்பார்கள் அடுத்ததாக காப்புத் தீர்த்த உற்சவப் பூஜை இடம்பெறும் இதனை தம்பிமுத்து, குமாரசாமி என்பவர் நடத்தி வைப்பர் எமது கிண்ணையடி ஊரிலே அமையப் பெற்றிருக்கும் ஆலயம் எமக்கு உணர்த்தும் தத்துவங்கள் யாதெனில் சைவ சமயமானது மனிதனை நல்லவண்ணம் வாழ வழி காட்டுகின்றது.

ஒருவன் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என நினைக்காது மண்ணில் எல்லோரும் வாழ வேண்டும் என நினைத்து வழிகாட்டுவதும் சைவ சமயமாகும் 'மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன ஆகுல நீரபிற' என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் வாக்கு மனதிலே அழுக்கில்லாதிருத்தல் எல்லா அறங்களிலும் மேலானது என்பதை ஆலய வழிபாட்டின் மூலம் சைவ சமயம் ஏற்படுகின்றது. எமது ஊரிலே பல ஆலயங்கள் அமைந்திருக்கின்றது. எமது விநாயகர் ஆலயத்திற்கு நேரே முன்னாலேயே மாரியம்மன் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

அங்கு திங்கட்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் பக்தர்கள் வழிப்பட்டு வருவர் அங்கு வருடத்திற்கு கொரு முறை மாரியம்மனுக்கு சடங்குகள் இடம் பெறும் தன்னிடம் வரம் வேண்டும் பக்தர்களின் மனங்களில் நிறைந்தவராக அம்மன் தனது பக்தர்களுக்கு வேண்டும் வரத்தினை வழங்குபவராகவும் அமர்ந்திருந்து அருளாட்சி புரிந்து வருகின்றார் மாரியம்மனின் சடங்குகள் வருடந்தோறும் மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

சடங்கின்போது பல விதமான நாட்டார் தெய்வங்களை அழைத்து கலை ஆடப்படும். பின்னர் ஒவ்வொரு தெய்வங்களும் கட்டுச் சொல்லுதல்கள் எல்லாம் இடம் பெறும் ஏழு நாட்களில் சடங்குகள் இனிதே நிறைவு பெறும் நித்தமும் ஆலயம் சென்று இறையருள் பெற்று இன்புடன் வாழ்வோமாக.......

ஓம் சாந்தி ! ......... சாந்தி !........... சாந்தி !........

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றியுரை

நான் எழுத்தாக்கற் துறையில்க் கால்பதித்து கிட்டத்தட்ட 20 வருடங்களாகிவிட்டன. ஆனால் கிண்ணையடி ஊர்சார்ந்த வரலாறினை பல தடவைகள் பல நூல்களில் எழுதி இருக்கின்றேன். ஆனால் கிண்ணையடி ஊரோடு எம் பெருமானாகிய ஸ்ரீ மாணிக்கப்பிள்ளை யாரின் வரலாற்றினையும் அருளம்சங்களையும் எழுதியது இதுவே முதல்த்தடவைகளாகும். எனக்கு எமது விநாயகர் ஆலயம் பற்றி எழுத வேண்டும் என்ற எண்ணம் என்னுள் உருவாகியதும். எனது அம்மாவிடம்தான் முதலில் சென்று கதைத்து முதல் தரவுகளை பெற்றுக்கொண்டேன். அதன் பின்னர் இன்னும் ஓரிருவரிடம் கதைத்து சில தகவல்களை பெற்றுக்கொண்டேன். அந்த வகையில் உதவி புரிந்தவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்வதோடு 2017ம் ஆண்டு இறுதிப்பகுதியில் எமது ஆலயப் பூசகராக இருந்த விஷ்ணு ஐயாவிற்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். மேலும் நான் உருவாக்கிய நூலினை வடிவமைத்து எடுப்பதற்கு உதவிய எமது ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினருக்கும் இம் மலரை அச்சிட்டு உதவிய அச்சகத்தார் உள்ளிட்ட அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோன்.

**"எந்நன்றி கொண்டார்க்கு உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்நன்றி கொண்ட மகற்கு"**

நன்றி

**அன்புடன்**

**மங்கையற்கரசி செல்வரட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2019 ஆம் ஆண்டுக்குரிய நிர்வாக சபையினர்

1. இ.இலங்கேஸ்வரன் (தலைவர்)
2. த.பகீதரன் (உபதலைவர்)
3. க.புவினராஜ் (செயலாளர்)
4. செ.யோகராஜா (உப செயலாளர்)
5. இ.கமலநாதன் (பொருளாளர்)
6. கி.கலைப்பிரியன் (கணக்காய்வாளர்)
7. ஆலோசகர்கள் :
    - அ.அருளேந்திரன்
    - ச.தர்மபாலன்
8. நிர்வாக சபை உறுப்பினர்கள்.
    - சு.மதிவாணன்
    - த.குமாரசாமி
    - த.சந்திரகாசன்
    - ச.நோதீஸ்வரன்
    - க.சிவநாதன்
    - லி.ஜெயஸ்வரன்
    - ந.முரளிதாசன்
    - மு.கோகிலதாசன்
    - கி.சுரேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர் மனம் கவரும்
மங்காத அசல் 22 கரட்
தங்க நகைகள்
அழகுக்கு அழகூட்டும்
அலங்கார வடிவங்களில்
குறித்த தவணையில் பெற்றிட
நாடுங்கள்



LGH

லங்கா
கோல்ட் ஹவுஸ்



பிரதான வீதி, வாழைச்சேனை
T.P : 077 2271 221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org